# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2021–2022

# செய்தி மற்றும் விளம்பரம்

## மானியக் கோரிக்கை எண்.28

## மு.பெ.சாமிநாதன்

செய்தித் துறை அமைச்சர்

## மானியக் கோரிக்கை எண்: 28
## செய்தி மற்றும் விளம்பரம்
## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 3 |
| 1 | செய்தி வெளியீட்டுப் பிரிவு | 6 |
| 2 | புகைப்படப் பிரிவு | 19 |
| 3 | மேற்கோள் பிரிவு | 21 |
| 4 | நினைவகங்கள் | 23 |
| 5 | அரசு விழாக்கள் | 42 |
| 6 | கள விளம்பரம் | 59 |
| 7 | விளம்பரம் | 63 |
| 8 | தமிழ்நாடு திரைப்படப் பிரிவு | 67 |
| 9 | பொருட்காட்சிப் பிரிவு | 70 |
| 10 | மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் | 77 |
| 11 | சென்னை – மாநிலச் செய்தி நிலையம் | 80 |
| 12 | தமிழரசு | 84 |
| 13 | தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் (ம) தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் | 89 |
| 14 | திரைப்படம், வீடியோ மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பு | 96 |
| 15 | திரைப்படத்துறையினர் நலவாரியம் | 106 |
| 16 | திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள் | 113 |
| | நிறைவுரை | 120 |

**"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"**

(குறள்–643)

கேட்போரைக் கவரும் தன்மையுடையதாகவும், கேட்காதவரும் தேடிவந்து விரும்பிக் கேட்கக் கூடியதாகவும் அமைவதே சொல்வன்மை எனப்படும்.

**– கலைஞர் உரை**

# முன்னுரை

முத்தமிழறிஞர் கலைஞர் முதன்முறையாகத் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை கேட்பாரைக் கவரும் தன்மையுடையதாகவும், கேளாதவர்களும் தேடிவந்து நாடிக் கேட்கக் கூடியதாகவும் தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை மேலோங்கி வளரத் தொடங்கியது.

தமிழ்நாடு அரசின் அனைத்துச் செய்திகளையும் சுருக்கமாகவும், எளியோர் புரிந்துகொள்ளும் நடையிலும், வலிமையாக மக்கள் உள்ளத்தில் பதியும் வகையிலும் ஊடகச் செய்திகளை உருவாக்கி வெற்றிபெற வைக்கும் தலையாயப் பணியைக் கொண்டது செய்தி மக்கள் தொடர்புத்துறையாகும்.

மன்னராட்சி காலம் முதல் மக்களாட்சிக் காலம் வரை அரசின் செய்திகளை, திட்டங்களை மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் தனி அமைப்பாகச் செய்தித்துறை தொடர்ந்து இயங்கி வருகிறது.

அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை வாயிலாக மாவட்டந்தோறும், செய்தி நிலையங்கள் அமைக்கப்பட்டு அரசு தொடர்பான அனைத்துச் செய்திகளும், அரசாணைகளும், புள்ளி விவரங்களும் எளிதில் மக்களுக்குச் செய்தி மக்கள் தொடர்புத்துறை வாயிலாகக் கொண்டு செல்லப்பட்டன.

அனைத்துத் தரப்பு மக்களின் துயர் துடைத்தல், பொதுநலன் பேணுதல், மக்களுக்கு எந்நிலையிலும் எப்பொழுதும் தொண்டாற்றுகின்ற பேருள்ளம், இனமான மொழி ஆர்வத் திட்டங்கள் என ஓய்வின்றி செயலாற்றும் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசு, தமிழகம் முழுவதிலும் தக்க முறையில் பரப்பும் சீரிய பணியைத் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் வெற்றிகரமான நூறு நாள் ஆட்சியின் தொடர்பணிகளைத் தொகுத்துத்

"தலைநிமிரும் தமிழகம் – நூற்றாண்டின் திசையில் நூறு நாட்கள்" எனத் தமிழரசின் சிறப்பிதழ் வெளியிட்டுள்ளதை வையகமே பாராட்டி மகிழ்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொய்வில்லாத வெற்றிப் பணிகளை முன்னிலைப்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை தனது பல்வேறு அலகுகளின் துணை கொண்டு கூர்மையாகத் திட்டமிட்டு அரசின் கொள்கைகளை விளக்கியும் திட்டங்கள், விழிப்புணர்வுச் செய்திகள் ஆகியவற்றை முறையாக, விரைவாக கொண்டுசேர்க்கும் பணியைச் செவ்வனே செய்கிறது.

# செய்தி வெளியீட்டுப் பிரிவு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முக்கிய அறிவிப்புகள், செய்திக் குறிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகளைப் பொதுமக்கள் உடனுக்குடன் அறிந்துகொள்ளும் வகையில், செய்தி வெளியீட்டுப் பிரிவானது அனைத்து நாட்களிலும் செயல்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் செய்திக் குறிப்புகள், அரசின் செய்தி வெளியீடுகள், அறிவிப்புகள், நலத்திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகள் ஆகியவற்றையும், அரசு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் விவரங்கள், நிகழ்ச்சி குறித்தப் புகைப்படங்கள் மற்றும் வீடியோ ஒளிப்பதிவுகள் ஆகியவற்றையும் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், செய்தி முகமைகள், காலமுறை இதழ்கள், பிற மாநில நாளிதழ்கள் என 325க்கும் மேற்பட்ட அச்சு மற்றும் காட்சி ஊடகங்களுக்கு உடனுக்குடன் செய்தி வெளியீட்டுப் பிரிவின் மூலம் மின்னஞ்சல் / இணையதளம் வழியாக அனுப்பி

வைக்கப்படுகிறது. இவை மக்களிடம் சென்று சேருவதும் உறுதிப்படுத்தப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் செய்தியாளர் கூட்டங்கள் நடத்திடத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள் பங்கேற்கும் அரசு சார்ந்த விழாக்கள், முக்கியப் பிரமுகர்கள் வருகை தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்குச் செய்தியாளர்கள் மற்றும் தொலைக்காட்சிப் பிரிவினருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கிடும் வகையில் ஒருங்கிணைப்புப் பணியை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. இதற்கெனச் செய்தியாளர் அறையில் நவீன இணையவழிச் செய்தி அனுப்புதலுக்கான தொழில்நுட்ப வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

தலைமையிடத்திலிருந்து வெளியிடப்படும் முக்கிய அறிவிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகள், முக்கிய நிகழ்வுகள் தொடர்பான செய்திகள், காணொலிக் காட்சிப் பதிவுகள், புகைப்படங்கள் அனைத்தும் அதிநவீன முறையில் செய்தி

மக்கள் தொடர்புத்துறையின் www.dipr.tn.gov.in வலைதளத்தில் உடனுக்குடன் அதிவேக முறையில் பதிவேற்றம் செய்யப்பட்டு, ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அதேபோன்று, அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் மின்னஞ்சல் மூலம் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்பட்டு, மாவட்ட அளவிலும் செய்திகள் மற்றும் புகைப்படங்கள் வெளிவர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இச்செய்தி வெளியீடுகள் தலைமைச் செயலகத்தில் கோப்புகள் வடிவில் பாதுகாத்து வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாவட்டங்களில் கலந்துகொள்ளும் அரசு நிகழ்ச்சிகள், விழாக்கள் மற்றும் இதர நிகழ்ச்சிகள் ஆகியவை குறித்த செய்திகளும், புகைப்படங்களும் அந்தந்த மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலம் தலைமையிடத்துச் செய்தி வெளியீட்டுப் பிரிவில் பெறப்படுகின்றன. அவற்றைத் தலைமையிடத்தில் இருந்து வெளியாகும் நாளிதழ்கள், வானொலி, தொலைக்காட்சிகள் மற்றும் சமூக வலைதளங்கள்

ஆகியவற்றின் மூலம் மக்களுக்குக் கொண்டுசேர்க்கும் பணியைச் செய்தி வெளியீட்டுப் பிரிவு செய்து வருகின்றது.

## பத்திரிகையாளர் நலன்

### பத்திரிகையாளர் ஓய்வூதியம்

அனைத்துத் தரப்புச் செய்திகளையும் பொதுமக்கள் பார்வைக்கும் கொண்டு செல்லும் வகையில் 24 மணி நேரமும் அயராது கடும்பணியாற்றி வரும் பத்திரிகையாளர்கள் ஓய்வுபெற்ற பின்னர், எத்தகு இயலாமைக்கும் ஆளாகாமல் இருக்க, அரசு சார்பில் மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. பத்திரிகைத் துறையில் இருபது ஆண்டுகள் பணியாற்றி, நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

பத்திரிகையாளர் ஓய்வூதியம் தற்போது மாதம் ரூபாய் பத்தாயிரம் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மொத்தம் 232 பத்திரிகையாளர்களுக்கு மாத ஓய்வூதியம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. வங்கிகள் வாயிலாக இத்தொகை வழங்கப்படுகிறது.

பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெறுவதற்கான பணிக்கொடையின் உச்சவரம்பானது ரூபாய் மூன்று இலட்சமாகவும், பணிக்காலத்தில் பத்திரிகையாளர்கள் பெற்றுவந்த ஆண்டு வருமானத்திற்கான உச்சவரம்பானது, ரூபாய் மூன்று இலட்சமாகவும் உள்ளது. இதன் மூலமாக அதிகப்படியான எண்ணிக்கையில் ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

**குடும்ப ஓய்வூதியம்**

ஓய்வூதியம் பெற்ற பத்திரிகையாளர்கள் மறைவுக்குப்பின்பு, அவர்களின் குடும்பங்களின் நலனைக் கருத்தில் கொண்டு, பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் தற்போது மாதம் ரூபாய் ஐந்தாயிரம் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மொத்தம், 45 பத்திரிகையாளர்களின் குடும்பத்தினர் பலன்பெற்று வருகின்றனர்.

**குடும்ப உதவி நிதி**

பத்திரிகைத் துறையில் இதழியல் பிரிவின் ஆசிரியர், உதவி ஆசிரியர், நிருபர், புகைப்படக்காரர் மற்றும் பிழைதிருத்துபவர் ஆகியோர் பணிக்காலத்தில் இயற்கை எய்த நேரின், அவர்களின் குடும்பத்தினருக்கு

முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி கீழ்க்கண்டவாறு அளிக்கப்பட்டு வருகிறது.

| பணிபுரிந்த ஆண்டுகள் | குடும்ப உதவி நிதித் தொகை |
|---|---|
| 5 | ரூ. 75,000/- |
| 10 | ரூ. 1,50,000/- |
| 15 | ரூ. 2,25,000/- |
| 20 | ரூ. 3,00,000/- |

**நல நிதியம்**

பத்திரிகையாளர் நலநிதிக்கென நிரந்தர நிதியாகத் 'தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில்' ரூபாய் ஒரு கோடி வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகையின் மூலம் ஆண்டுதோறும் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து, பத்திரிகையாளர்கள் பணிக்காலத்தில் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு, மருத்துவச் சிகிச்சைக்கு உள்ளாகும் நேரத்தில், அவர்களுக்கு மருத்துவ நிதி உதவி வழங்கிட நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்சமான தொகை ரூபாய் இரண்டு இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

**பத்திரிகையாளர்கள் முன்களப் பணியாளர்கள்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்கள் என்ற சிறப்புப் பிரிவில் சேர்த்து ஆணையிட்டுள்ளார்கள்.

**கொரோனா சிறப்பு ஊக்கத்தொகை**

கொரோனா வைரஸ் நோய்த்தொற்றுத் (COVID–19) தடுப்பு நடவடிக்கையாகப் பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மற்றும் காலமுறை இதழ்களில் பணிபுரியும் அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு ஊக்கத்தொகை ரூபாய் மூன்றாயிரத்திலிருந்து ரூபாய் ஐந்தாயிரமாக உயர்த்தப்பட்டு, 5,048 நபர்களுக்குச் சிறப்பு ஊக்கத்தொகை தலா ரூபாய் ஐந்தாயிரம் வீதம் மொத்தம் ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்திரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், விடுபட்ட அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர்கள் விண்ணப்பித்ததன்பேரில், சுமார் 1,000 செய்தியாளர்களுக்குத் தலா ரூபாய் ஐந்தாயிரம் வீதம் ரூபாய் ஐம்பது இலட்சம் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கொரோனா வைரஸ் நோய்த்தொற்றால் உயிரிழந்த ஊடகப் பிரிவினரின் வாரிசுதாரருக்கு இழப்பீட்டுத் தொகை**

கொரோனா வைரஸ் நோய்த்தொற்றால் உயிரிழந்த அங்கீகரிக்கப்பட்ட ஊடகப் பிரிவினரின் வாரிசுதாரருக்கு வழங்கப்பட்டு வந்த இழப்பீட்டுத் தொகை ரூபாய் ஐந்து இலட்சத்திலிருந்து ரூபாய் பத்து இலட்சமாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டு, இதுவரை பத்து செய்தியாளர்களின் வாரிசுதாரர்களுக்குத் தலா ரூபாய் பத்து இலட்சம் வீதம், ரூபாய் ஒரு கோடி இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**அரசு வாடகைக் குடியிருப்பு**

பத்திரிகைத் துறையில் பணிபுரியும் செய்தியாளர்களுக்கு அரசு விருப்புரிமை ஒதுக்கீட்டில் சென்னை மற்றும் அந்தந்த மாவட்டங்களில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் குறைந்த வாடகையில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

**செய்தியாளர் அங்கீகார அட்டை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் அரசு விழாக்கள் மற்றும் மிக முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளுக்குச் சென்று செய்திகள் சேகரித்திட வசதியாக, நாளிதழில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், தொலைக்காட்சியில் பணிபுரியும் செய்தியாளர்கள், ஒளிப்பதிவாளர்கள் மற்றும் செய்தி முகமையில் பணியாற்றும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் ஆகியோருக்கு 'அங்கீகார அட்டைகள்' அளிக்கப்பட்டு வருகின்றன. நடப்பாண்டிற்கு 771 செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவை சென்னைக்குத் தனியாகவும், மாவட்டத் தலைநகர்களுக்குத் தனியாகவும் அளிக்கப்படுகின்றன.

**செய்தியாளர் அட்டை**

செய்தியாளர்கள் செய்திக் களங்களுக்குச் சென்று, செய்திகள் சேகரித்து வெளியிட ஏதுவாக, காலமுறை இதழ் செய்தியாளர்களுக்குச் 'செய்தியாளர் அட்டைகள்' வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பாண்டிற்கு 643 செய்தியாளர்களுக்குச் 'செய்தியாளர் அட்டைகள்' வழங்கப்பட்டுள்ளன.

## செய்தியாளர்களுக்கான இலவசப் பேருந்துப் பயண அட்டை

செய்தியாளர் அங்கீகார அட்டை பெற்றுள்ள பத்திரிகையாளர்கள் சென்னை மற்றும் விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் 502 செய்தியாளர்களுக்கு இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்கப்பட்டு வருகிறது. அதேபோன்று அந்தந்த மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின்பேரில், செய்தியாளர்களுக்கு இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

## செய்தி முகமைகள்

பி.டி.ஐ. (Press Trust of India) மற்றும் யு.என்.ஐ. (United News of India) ஆகிய இரண்டு செய்தி முகமைகள் வெளியிடும் செய்திகள் கீழ்க்காணும் அலுவலகங்களில் கணினி மூலம் 24 மணிநேரமும் பெறப்பட்டு, முக்கியமான செய்திகள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திட சம்பந்தப்பட்ட அரசுத்துறை அலுவலர்களின் கவனத்திற்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கப்பட்டு, அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க வழிவகை செய்யப்படுகிறது.

1) மாண்புமிகு ஆளுநர் மாளிகை
2) செய்தி வெளியீட்டுப் பிரிவு, தலைமைச் செயலகம்

## செய்தியாளர் அறை

தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள செய்தியாளர் அறை நவீனத் தகவல் தொடர்பு வசதிகளுடன் சிறப்பான முறையில் பயன்பாட்டில் உள்ளது.

## செய்தி மக்கள் தொடர்புத்துறை வலைதளம்

ஊடகங்கள் மற்றும் நாளிதழ்களின் பயன்பாட்டிற்கென்றே செய்தி மக்கள் தொடர்புத் துறையால் **www.dipr.tn.gov.in** என்னும் முகவரியுடன் அதிநவீன வலைதளமானது உருவாக்கப்பட்டு, மிகச் சிறந்த முறையில், நிமிடத்திற்கு நிமிடம் செய்திகள் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. அரசு சார்ந்த செய்திகள், புகைப்படங்கள் மற்றும் காணொலிக் காட்சிப் பதிவுகள் அனைத்தும் அதிவேகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, ஊடகங்கள் தங்களுக்குத் தேவையானவற்றை உடனே பெற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த வலைதளம் உலகெங்கிலுமுள்ள தமிழர்களும், பொதுமக்களும் தமிழகத்தின் அன்றாட நிகழ்வுகளை உடனுக்குடன் அறிந்துகொள்ளப் பெரிதும் பயன்படுகிறது.

**ஊடக மையம்**

தலைமைச் செயலகப் பிரதான கட்டடத்தின் தரைத்தளத்தில் 'ஊடக மையம்' செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தில் பன்னிரெண்டு தொலைக்காட்சி சேனல்களில் வெளிவரும் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்புகள் மற்றும் அரசு சார்பான செய்திகள் பதிவு செய்யப்படுகின்றன.

மேலும், அரசுத் துறைகள் குறித்து வெளிவரும் புகார்கள் / குறைகள் தொடர்பான காணொலிகள் சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கட்செவி (WhatsApp) வாயிலாக உடனுக்குடன் அனுப்பப்பட்டு, பதிலுரை பெறப்பட்டு அவை ஊடகத்தில் வெளியிட வழிவகை செய்யப்பட்டு வருகின்றன.

தலைமைச் செயலகத்தில் இருந்து வெளியிடப்படும் செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள் மற்றும் புகைப்படங்கள் அனைத்தும் ஊடக மையத்திலிருந்து சென்னையில் உள்ள அனைத்து ஊடகங்களுக்கும் அனுப்பப்படுவதோடு, அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டு, அந்தந்த மாவட்டப் பதிப்புகளில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கண்ட செய்திகள், ஊடகங்களில் வெளியான விவரங்களை ஒவ்வொரு நாளும் தலைமைச் செயலகத்தில் உள்ள ஊடக மையத்திற்கு அனுப்பி வைக்கின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்பான செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள் மற்றும் புகைப்படங்கள் மாவட்ட நாளிதழ்களில் உரிய முறையில் வெளியிடப்பட்டு வருகின்றனவா என்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டுச் சரிபார்க்கப்படுகின்றன.

**சமூக ஊடகங்கள்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், அரசின் திட்டங்கள், சாதனைகள் மற்றும் அரசின் விழிப்புணர்வு செய்திகளைப் பொதுமக்கள் எளிதில் அறிந்து பயன்பெறுகின்ற வகையில் சமூக ஊடகங்களான கீச்சகம் (Twitter), முகநூல் (Facebook) ஆகியவற்றில் 07.05.2021 அன்று முதலும், படவரியில் (Instagram) 24.06.2021 அன்று முதலும், வலையொளியில் (YouTube) 30.06.2021 அன்று முதலும் வெளியிடப்பட்டு வருகின்றன.

## புகைப்படப் பிரிவு

சென்னைத் தலைமைச் செயலகத்தில் இயங்கிவரும் புகைப்படப் பிரிவில் உள்ள புகைப்படக்காரர்களைக் கொண்டு தலைமையிடம் மற்றும் மாவட்டங்களில், மாண்புமிகு குடியரசுத் தலைவர், மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர், மாண்புமிகு இந்தியப் பிரதமர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் கலந்துகொள்ளும் அரசு நிகழ்ச்சிகளைப் புகைப்படமெடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மாவட்டங்களில் உள்ள புகைப்படக்காரர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து மாவட்ட அளவில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளைப் புகைப்படம் எடுத்து வருகின்றனர்.

தலைமைச் செயலகப் புகைப்படக்காரர்களால் எடுக்கப்படும் புகைப்படங்கள் தலைமைச் செயலகச் செய்தி வெளியீட்டுப் பிரிவின் மூலம் ஊடகங்களில் வெளியிடுவதற்கு மின்னஞ்சல் வழியே அனுப்பி வைக்கப்படுகின்றன. மேலும், இந்தப் புகைப்படங்கள் பொதுமக்களின் பார்வைக்குத் தலைமைச் செயலகம்

மற்றும் புதுதில்லி தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றில் காட்சிப்படுத்தி வைக்கப்படுகின்றன. அதுபோலவே மாவட்டங்களில் உள்ள புகைப்படக்காரர்களால் எடுக்கப்படும் புகைப்படங்கள், வெளியிடுவதற்காக அந்தந்த மாவட்டத்தில் இயங்கிவரும் செய்தி நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகின்றன. அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள விளம்பரப் பலகைகள் மற்றும் முக்கிய அரசு நிகழ்ச்சிகளில் நடத்தப்படும் சிறு புகைப்படக் கண்காட்சிகள் ஆகியவற்றில் இப்புகைப்படங்கள் பொதுமக்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த புதிய திட்டங்கள் தொடர்பான புகைப்படங்கள், சிறப்பு மலர், "தமிழரசு இதழ்" தமிழ் மற்றும் ஆங்கில இதழ்கள் மற்றும் காலப்பேழை மலரிலும் அச்சடிக்கப்பட்டுப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் முறையில் வெளியிடப்பட்டு வருகின்றன.

அனைத்து அரசு நிகழ்ச்சிகளிலும் எடுக்கப்படும் புகைப்படங்கள் எதிர்காலப் பயன்பாடு கருதிக் குறுந்தகடு (DVD) மற்றும் வன்தட்டுகளில் (Hard Disk) தலைப்பிடப்பட்டு, நாள் வாரியாகச் சேமித்து ஆவணங்களாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

# மேற்கோள் பிரிவு

அனைத்து நாளிதழ்கள், காலமுறை இதழ்கள், வெளிமாநில நாளிதழ்கள் போன்றவற்றில் வெளிவரும் முக்கியச் செய்திகளைப் பல்வேறு இனங்களாகப் பிரித்துத் துறை வாரியாக நாள்தோறும் அரசின் அந்தந்தத் துறையினரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லும் தலையாய பணியைச் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மேற்கோள் பிரிவு சிறப்புடன் செய்து வருகிறது.

இப்பிரிவில் நாள்தோறும் காலை, மாலை நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் வெளிமாநில நாளிதழ்களில் வெளியாகும் முக்கியச் செய்திகள், செய்தி நறுக்குகளாகத் தொகுக்கப்பட்டுத் தினந்தோறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்குக் கோப்பு வடிவில் அனுப்பப்பட்டு வருகின்றன. அதேபோல, தலைமைச் செயலாளர் மற்றும் அரசுத்துறைச் செயலாளர்களின் பார்வைக்காகவும், நடவடிக்கைக்காகவும் அனுப்பிவைத்து, உரிய துறையின் மூலம் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதைத் தவிர இப்பிரிவில், அரசுத்துறைகள் குறித்து வெளிவரும் புகார்கள் / குறைகள் குறித்த

செய்திகள் 'உள்ளறி' (Scan) செய்யப்பட்டு, சம்பந்தப்பட்டத் துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கட்செவி (WhatsApp) வாயிலாக உடனுக்குடன் அனுப்பி, பதிலுரை பெறப்பட்டு அவை ஊடகத்தில் வெளியிட வழிவகை செய்யப்படுகிறது. மேலும், முக்கியமான நாளிதழ்கள் முறையாகத் தொகுத்து பைண்டிங் செய்யப்பட்டு எதிர்காலத் தேவைக்கென இப்பிரிவில் ஆவணங்களாகப் பாதுகாக்கப்படுகிறது. சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெறும் காலங்களிலும், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள் ஆகியோருக்கு நாளிதழ்களில் வெளியாகின்ற முக்கியச் செய்தி நறுக்குகள் தேவைப்படும்போது உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், உரைகள், செய்தியாளர்கள் சந்திப்பு, அரசின் திட்டங்கள், சாதனைகள், அரசு நலத்திட்ட உதவிகள், உள்ளிட்ட அனைத்துச் செய்தி நறுக்குகளும், பல்வேறு தலைவர்களின் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்கள், நாளிதழ்களின் கட்டுரைகள், தலையங்கங்கள் போன்றவையும் தனித்தனித் தலைப்புகளில் தொகுக்கப்பட்டுக் கணினியில் பகுதிவாரியாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

# நினைவகங்கள்

**"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்**
**பொன்றாது நிற்பதொன்று இல்"**

**(குறள்–233)**

ஒப்பற்றதாகவும், அழிவில்லாததாகவும் இந்த உலகத்தில் நிலைத்திருப்பது புகழைத் தவிர வேறு எதுவுமே இல்லை.

**– கலைஞர் உரை**

அய்யன் திருவள்ளுவரின் இந்தத் திருக்குறள், உலகில் புகழைத் தவிர ஒருவருக்கு நிலைத்து நிற்பது எதுவும் இல்லை என்கிறது. வாழும் காலத்தில் தம் வாழ்க்கை நலம் மட்டுமே பாராது, வையக மக்களின் நலன், நாட்டு நலன், மொழி நலன் என அனைத்தின் மேன்மைக்காகவும் பாடுபட்டு, அவற்றின் மூலம் அழியாப் புகழ்ச் செல்வத்தைப் பதித்துச் சென்ற பெருமக்களின் நினைவுகளை வருங்காலத் தலைமுறைகளும் அறிந்து, உணர்ந்து போற்றிப் புகழ்ந்திட வேண்டும். அதன் மூலம் தமிழர்தம் பெருமைகளை இந்தியத் திருநாட்டின் மற்ற மாநிலங்களும், அயல் நாடுகளும் அறிந்திட வேண்டும்.

இந்த உணர்வுடன் புகழ் பதித்து மறைந்த பெருமக்களைப் போற்றி தமிழ்நாடு அரசு உருவாக்கிக் காத்து வரும் நினைவுச் சின்னங்கள் பலவாகும்.

அவற்றுள், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், 74 நினைவகங்கள், நான்கு அரங்கங்கள், ஆறு நினைவுத் தூண்கள், ஒரு நினைவுச் சின்னம் ஆகியவை உருவாக்கப்பட்டு, அனைவரும் அறிந்து பயனடையும் வகையில், சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் விவரங்கள்:

**தமிழகத்தில் அமைந்துள்ள நினைவகங்களின் விவரம்**

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் அருங்காட்சியகம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 2 | பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 3 | பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 4 | பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 5 | காந்தி மண்டபம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 6 | மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 7 | மகாகவி பாரதியார் நினைவு இல்லம் | துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை |
| 8 | பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம் | திருமலைச் சாலை, தியாகராயநகர், சென்னை |
| 9 | வள்ளுவர் கோட்டம் | நுங்கம்பாக்கம், சென்னை |
| 10 | மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 11 | தியாகிகள் மணிமண்டபம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 12 | இரட்டைமலை சீனிவாசன் நினைவகம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 13 | கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் மணிமண்டபம் | டாம்ஸ் சாலை, புதுப்பேட்டை, சென்னை |
| 14 | சிந்தனைச் சிற்பி ம.சிங்கார வேலர் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி என்.ஜீவரத்தினம் மணிமண்டபங்கள் மற்றும் நூலகம் | இராயபுரம், சென்னை |
| 15 | நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபம் | அடையாறு, சென்னை |
| 16 | பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் | சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 17 | திருப்பூர் குமரன் நினைவகம் | திருப்பூர், திருப்பூர் மாவட்டம் |
| 18 | பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம் | உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 19 | தந்தை பெரியார் நினைவகம் | வைக்கம், கோட்டயம் மாவட்டம், கேரள மாநிலம் |
| 20 | பெரியார்–அண்ணா நினைவகம் | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 21 | தீரன் சின்னமலை மணிமண்டபம் | ஓடாநிலை, அரச்சலூர் ஈரோடு மாவட்டம் |
| 22 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம் | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 23 | வள்ளல் அதியமான் கோட்டம் | தருமபுரி, தருமபுரி மாவட்டம் |
| 24 | தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம் | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 25 | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லம் | நாமக்கல், நாமக்கல் மாவட்டம் |
| 26 | வ.வே.சுப்பிரமணிய அய்யர் நினைவு இல்லம் | வரகனேரி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 27 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம் | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 28 | பட்டுக்கோட்டை அழகிரிசாமி நினைவு மண்டபம் | ஆவுடையான்குளம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 29 | தில்லையாடி வள்ளியம்மை நினைவகம் | தில்லையாடி, மயிலாடுதுறை மாவட்டம் |
| 30 | தமிழிசை மூவர் மணிமண்டபம் | சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம் |
| 31 | தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவு இல்லம் | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |
| 32 | தியாகி பி.சீனிவாசராவ் நினைவு மண்டபம் | திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம் |
| 33 | மனுநீதிச் சோழன் நினைவு மண்டபம் | திருவாரூர், திருவாரூர் மாவட்டம் |
| 34 | கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம் | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 35 | தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம் | குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 36 | மருதுபாண்டியர் நினைவு மண்டபம் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 37 | வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபம் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| 38 | தியாக சீலர் கக்கன் மணிமண்டபம் | தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 39 | தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லம் | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 40 | பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லம் | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |
| 41 | மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபம் | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |
| 42 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இல்லம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 43 | பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா மணிமண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 44 | தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 45 | மகாகவி பாரதியார் மணிமண்டபம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 46 | மகாகவி பாரதியார் இல்லம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
| --- | --- | --- |
| 47 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் இல்லம் | ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 48 | வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம் | கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம் |
| 49 | சுதந்திரப் போராட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவகம் | கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 50 | சுதந்திரப் போராட்ட வீரன் வெள்ளையத் தேவன் நினைவகம் | வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம் |
| 51 | அமுதகவி உமறுப்புலவர் நினைவகம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 52 | வீரபாண்டிய கட்ட பொம்மன் மணிமண்டபம் | கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம் |
| 53 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. மணிமண்டபம் | திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |
| 54 | பூலித்தேவன் நினைவு மாளிகை | நெற்கட்டும்செவல், திருநெல்வேலி மாவட்டம் |
| 55 | தமிழறிஞர் கால்டுவெல் நினைவு இல்லம் | இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 56 | தியாகி வாஞ்சிநாதன் மணிமண்டபம் | செங்கோட்டை, தென்காசி மாவட்டம் |
| 57 | விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டி வீரன் மணிமண்டபம் | பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 58 | பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் மணிமண்டபம் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 59 | காந்தி நினைவு மண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 60 | பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 61 | சதாவதானி செய்குதம்பி பாவலர் நினைவு மண்டபம் | இடலாக்குடி, கோட்டாறு நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 62 | மார்ஷல் நேசமணி மணிமண்டபம் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 63 | முத்து மண்டபம் (இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரமராஜ சிங்கன் நினைவகம்) | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 64 | விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபம் | விருப்பாட்சி, திண்டுக்கல் மாவட்டம் |
| 65 | மாமன்னர்கள் ஹைதர்அலி, திப்பு சுல்தான் மணிமண்டபம் | அடியனூத்து கிராமம், திண்டுக்கல் மாவட்டம் |
| 66 | ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மணிமண்டபம் | ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம் |
| 67 | விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை நினைவுச் சின்னம் | சங்ககிரி, சேலம் மாவட்டம் |
| 68 | சுவாமி சகஜானந்தா மணிமண்டபம் | சிதம்பரம், கடலூர் மாவட்டம் |
| 69 | உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு மணிமண்டபம் | வையம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் |
| 70 | இராமசாமி படையாட்சியார் நினைவு மண்டபம் | மஞ்சக்குப்பம், கடலூர் மாவட்டம் |
| 71 | டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபம் | திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 72 | முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா நினைவு மண்டபம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 73 | முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா நினைவில்லம் | போயஸ் கார்டன், சென்னை |
| 74 | பாரதமாதா நினைவாலயம் | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |

## அரங்கங்கள்

| வ. எண் | அரங்கம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | மூதறிஞர் இராஜாஜி மண்டபம் | ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை |
| 2 | கலைவாணர் அரங்கம் | ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை |
| 3 | அண்ணா கலை அரங்கம் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 4 | மகாமகம் பல்நோக்கு கலை அரங்கம் | கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் |

## நினைவுத் தூண்கள்

| வ. எண் | நினைவுத் தூண் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | "வெள்ளையனே வெளியேறு" இயக்கப் பொன்விழா நினைவுத் தூண் | காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 2 | சுதந்திரப் பொன்விழா நினைவுத் தூண் | போர் நினைவுச் சின்னம் அருகில், காமராஜர் சாலை, சென்னை |
| 3 | குடியரசு பொன்விழா நினைவுத் தூண் | காந்தி சிலை அருகில், காமராஜர் சாலை, சென்னை |
| 4 | சிப்பாய்ப் புரட்சி நினைவுத் தூண் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 5 | பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா நினைவுத் தூண் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 6 | இசை மேதை நல்லப்பசுவாமி நினைவுத் தூண் | விளாத்திகுளம், தூத்துக்குடி மாவட்டம். |

## நினைவுச் சின்னம்

| வ. எண் | நினைவுச் சின்னம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | வீரத்தாய் குயிலி நினைவுச் சின்னம் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |

## தற்போது நடைபெற்று வரும் முதன்மையான திட்டப் பணிகள்

- நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்தில் அல்லாள இளைய நாயகர் அவர்களுக்கு ரூபாய் இருபத்தொன்று இலட்சத்து எண்பதாயிரம் மதிப்பீட்டில் குவிமாடத்துடன் (Dome) முழுத்திருவுருவச் சிலை அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு ரூபாய் தொண்ணூற்று இரண்டு இலட்சத்து இருபத்தேழாயிரம் மதிப்பீட்டில் முழுத்திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபமும், அவற்றுள் ஒரு நூலகமும் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அருகில் உள்ள அச்சிறுப்பாக்கம் கிராமத்தில் இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு ரூபாய் தொண்ணூற்று ஏழு இலட்சத்து அறுபத்து நான்காயிரம் மதிப்பீட்டில் முழுத்திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள ஒண்டிவீரன் மணிமண்டபத்தை ரூபாய் ஐம்பத்தொன்று இலட்சத்து எழுபத்தொன்பதாயிரம் மதிப்பீட்டில் புனரமைப்பதுடன், அதே வளாகத்தில் நூலகம் ஒன்றை அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, புனரமைப்புப் பணிகள் மற்றும் நூலக கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், கோ–அபிஷேகபுரம் கிராமத்தில் சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்களுக்கு ரூபாய் நாற்பத்து மூன்று இலட்சத்து நாற்பதாயிரம் மதிப்பீட்டில் முழுத்திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்க, அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், கோ–அபிஷேகபுரம் கிராமத்தில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களுக்கு ரூபாய் தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மதிப்பீட்டில் முழுத்திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபமும், அவற்றுள் ஒரு நூலகமும் அமைக்க, அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- திருச்சிராப்பள்ளி மாவட்டம், கோ–அபிஷேகபுரம் கிராமத்தில் எம்.கே.தியாகராஜ பாகவதர் அவர்களுக்கு ரூபாய் நாற்பத்து இரண்டு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரம் மதிப்பீட்டில் முழுத்திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆழியார் கிராமத்தில் வி.கே.பழனிசாமி கவுண்டர் அவர்களுக்கு ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் முழுத்திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபமும், அவற்றுள் ஒரு நூலகமும் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- 1920ஆம் ஆண்டு மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள பெருங்காமநல்லூரில் ஆங்கிலேய ஆட்சியாளர்களின் எதேச்சதிகாரச் சட்டத்தை எதிர்த்துப் போராடி, தங்கள் இன்னுயிரை ஈந்த பிரமலைக் கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த பதினாறு தியாகிகளைச் சிறப்பிக்கும் வகையிலும், அந்நிகழ்வு நடந்து 100 ஆண்டுகள் ஆனதைக் குறிக்கும் வகையிலும், ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஏழு இலட்சம் மதிப்பீட்டில் நினைவு மண்டபம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

- ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சியில், தீரன் சின்னமலையின் படைத் தளபதியாக இருந்த வீரன் பொல்லான் அவர்களுக்கு ரூபாய் ஒரு கோடியே எண்பத்து இரண்டு இலட்சம் மதிப்பீட்டில் முழுத்திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- தூத்துக்குடி மாவட்டம், காமநாயக்கன்பட்டியில் அமைந்துள்ள புனித பரலோகமாதா ஆலய வளாகத்தில் வீரமாமுனிவர் அவர்களுக்கு ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் முழுத்திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்க நிர்வாக அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 18.5.2021 அன்று அறிவித்ததற்கிணங்க, மறைந்த எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்களின் நினைவினைப் போற்றும் வகையில் அன்னார் பெயரில் ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சத்து எழுபதாயிரம் மதிப்பீட்டில் அரங்கமும், முழுத்திருவுருவச் சிலையும், அதனுடன் நூலகமும் அமைக்கும் பொருட்டு அரசாணை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- தூத்துக்குடி மாவட்டம், வல்லநாட்டில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன் மணிமண்டபத்தில் ரூபாய் முப்பத்தொன்பது இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மதிப்பீட்டில் சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன் அவர்கள் குதிரை மீது அமர்ந்தவாறு உள்ள சிலை அமைக்கும் பணி தொடங்கப்படவுள்ளது.

## நிறைவுபெற்ற பணிகள்

- தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில் அமைந்துள்ள வீரன் சுந்தரலிங்கம் மணிமண்டபத்தை ரூபாய் எழுபத்திரண்டு இலட்சத்து எழுபதாயிரம் மதிப்பீட்டில் புனரமைப்பதுடன், அவற்றுள் ஒரு நூலகம் அமைக்கும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள காந்தி மண்டபம் ரூபாய் முப்பது இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு, தேவையான மரத் தளவாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபத்தை ரூபாய் பத்து இலட்சத்து ஐம்பதாயிரம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு, தேவையான மரத் தளவாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் அமைந்துள்ள மகாகவி பாரதியார் இல்லம் ரூபாய் பத்து இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில் அமைந்துள்ள தீரன் சின்னமலை மணிமண்டபத்தில் ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டுதல் மற்றும் வர்ணம் பூசும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- சென்னையில் அமைந்துள்ள கண்ணியத் தென்றல் காயிதேமில்லத் முகம்மது இஸ்மாயில் மணிமண்டபத்தில் ரூபாய் இரண்டு இலட்சம் மதிப்பீட்டில் நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.
- தூத்துக்குடி மாவட்டம், கயத்தாரில் உள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபத்தில் ரூபாய் நான்கு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரம் மதிப்பீட்டில் நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.
- தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பாப்பாரப்பட்டியில் ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் மதிப்பீட்டில் நூலகத்துடன் கூடிய பாரதமாதா நினைவாலயம் அமைக்கப்பட்டு, 1.8.2021 அன்று பொதுமக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**மணிமண்டபங்கள் / நினைவகங்களை 360° பரிமாணத்தில் படமெடுத்தல்**

சென்னை பெருநகரில் உள்ள 14 மணிமண்டபங்கள் / நினைவகங்கள், கலைவாணர் அரங்கம் ஆகியவற்றை ரூபாய் ஐந்து இலட்சம் செலவில் 360° பரிமாணத்தில் படமெடுத்து செய்தித்துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து மற்ற மண்டபங்கள் / நினைவகங்கள் ஆகியவற்றை 360° பரிமாணத்தில் படமெடுத்து பதிவேற்றம் செய்யப்படும்.

# அரசு விழாக்கள்

இந்தியத் துணைக் கண்டத்தின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட தகைமிகு தலைவர்களையும், செம்மொழிச் சிறப்புப் பெற்ற நம் தாய்மொழியாம், தமிழ்மொழி வளர்ச்சிக்காக அயராது உழைத்த அறிஞர் பெருமக்களைப் போற்றிப் புகழ்ந்திடவும், அவர்களது நோக்கங்கள் மற்றும் சீர்மிகு சிந்தனைகளை எதிர்காலத் தலைமுறையினர் அறிந்துகொள்ளவும் அவர்களது பிறந்த நாள் விழாக்கள் மற்றும் நினைவு நாள் நிகழ்ச்சிகள் தமிழ்நாடு அரசால் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசின் சார்பில் நடத்தப்படும் விழாக்களில் மாண்புமிகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்று, நினைவகங்களில் அன்னார்களின் திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலைகள் அணிவித்தும், திருவுருவப் படங்களுக்கு மலர்தூவியும் மரியாதை செலுத்துகின்றனர்.

## சென்னையில் நடத்தப்படும் விழாக்கள்

| வ. எண் | நாள் | விழாக்கள் |
|---|---|---|
| 1 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர்.<br>பிறந்த நாள் விழா |
| 2 | ஜனவரி 23 | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்<br>பிறந்த நாள் விழா |
| 3 | ஜனவரி 30 | அண்ணல் காந்தியடிகள்<br>நினைவு நாள் |
| 4 | பிப்ரவரி 18 | சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்<br>பிறந்த நாள் விழா |
| 5 | பிப்ரவரி 24 | புரட்சித் தலைவி செல்வி<br>ஜெ ஜெயலலிதா<br>பிறந்த நாள் விழா |
| 6 | ஏப்ரல் 14 | டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்<br>பிறந்த நாள் விழா |
| 7 | ஏப்ரல் 17 | சுதந்திரப் போராட்ட வீரர் தீரன்<br>சின்னமலை பிறந்த நாள் விழா |
| 8 | ஏப்ரல் 27 | சர்.பி.டி.தியாகராயர்<br>பிறந்த நாள் விழா |

| வ. எண் | நாள் | விழாக்கள் |
|---|---|---|
| 9 | ஏப்ரல் 29 | பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா |
| 10 | (சித்திரை முழு நிலவு நாள்) | சித்திரை முழு நிலவு நாளன்று கண்ணகி சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவப் படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர்தூவி மரியாதை செய்தல் |
| 11 | ஜூன் 5 | கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் பிறந்த நாள் விழா |
| 12 | ஜூன் 24 | கவியரசு கண்ணதாசன் பிறந்த நாள் விழா |
| 13 | ஜூன் 26 | ம.பொ. சிவஞானம் பிறந்த நாள் விழா |
| 14 | ஜூலை 7 | இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாள் விழா |
| 15 | ஜூலை 11 | வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாள் விழா |

| வ. எண் | நாள் | விழாக்கள் |
|---|---|---|
| 16 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா |
| 17 | ஜூலை 17 | தியாகிகள் தினம், தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் |
| 18 | ஜூலை 17 | தியாகிகள் தினம், தியாகி சங்கரலிங்கனார் |
| 19 | ஜூலை 17 | தியாகிகள் தினம், தியாகி செண்பகராமன் |
| 20 | (ஆடி 18) | சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை நினைவு நாள் |
| 21 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா |
| 22 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா |
| 23 | செப்டம்பர் 16 | இராமசாமி படையாட்சியார் பிறந்த நாள் விழா |
| 24 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா |

| வ. எண் | நாள் | விழாக்கள் |
|---|---|---|
| 25 | செப்டம்பர் 27 | டாக்டர் சி.பா. ஆதித்தனார் பிறந்த நாள் விழா |
| 26 | செப்டம்பர் 29 | முன்னாள் சென்னை மேயர் சிவராஜ் பிறந்த நாள் விழா |
| 27 | அக்டோபர் 1 | நடிகர் திலகம் சிவாஜிகணேசன் பிறந்த நாள் விழா |
| 28 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா |
| 29 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா |
| 30 | நவம்பர் 8 | தமிழறிஞர் வீரமாமுனிவர் பிறந்த நாள் விழா |
| 31 | நவம்பர் 14 | பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் விழா |
| 32 | நவம்பர் 23 | கவிஞர் சுரதா பிறந்த நாள் விழா |
| 33 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா |
| 34 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா |

## மாவட்டங்களில் நடத்தப்படும் விழாக்கள்

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 1 | ஜனவரி 3 | வீரமங்கை வேலுநாச்சியார் பிறந்த நாள் விழா | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| 2 | ஜனவரி 15 | ஜான் பென்னிகுயிக் பிறந்த நாள் விழா | லோயர் கேம்ப், தேனி மாவட்டம் |
| 3 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர்எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா | காமராஜர் சாலை, சென்னை |
| 4 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா | சேலம், சேலம் மாவட்டம் |
| 5 | (தை 5) | காலிங்கராயன் அவர்கள் வாய்க்காலை வெட்டி நாட்டுக்கு அர்ப்பணித்த நாள் | காலிங்கராயன் அணைக்கட்டு, ஈரோடு மாவட்டம் |
| 6 | ஜனவரி 26 | தியாகி சங்கரலிங்கனார் பிறந்த நாள் விழா | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 7 | ஜனவரி 27 | சுவாமி சகஜானந்தா பிறந்த நாள் விழா | சிதம்பரம், கடலூர் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 8 | பிப்ரவரி 1 | ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் பிறந்த நாள் விழா | ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம் |
| 9 | பிப்ரவரி 6 | உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு பிறந்த நாள் விழா | வையம்பாளையம் கோயம்புத்தூர் மாவட்டம். |
| 10 | பிப்ரவரி 7 | மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பிறந்த நாள் விழா | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |
| 11 | (தைப்பூசத் திருநாள்) | திருமலை நாயக்கர் பிறந்த நாள் விழா | மதுரை, மதுரை மாவட்டம் |
| 12 | பிப்ரவரி 18 | சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் பிறந்த நாள் விழா | இராயபுரம், சென்னை மாவட்டம் |
| 13 | பிப்ரவரி 19 | தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. பிறந்த நாள் விழா | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |
| 14 | பிப்ரவரி 22 | தில்லையாடி வள்ளியம்மை பிறந்த நாள் விழா | தில்லையாடி, மயிலாடுதுறை மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 15 | பிப்ரவரி 24 | புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா பிறந்த நாள் விழா | சேலம், சேலம் மாவட்டம் |
| 16 | மார்ச் 30 | ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி பிறந்த நாள் விழா | இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் |
| 17 | ஏப்ரல் 2 | வ.வே.சுப்பிரமணிய அய்யர் பிறந்த நாள் விழா | வரகனேரி, திருச்சி மாநகர், திருச்சி மாவட்டம் |
| 18 | ஏப்ரல் 10 | தியாகி பி. சீனிவாசராவ் பிறந்த நாள் விழா | திருத்துறைப்பூண்டி திருவாரூர் மாவட்டம் |
| 19 | ஏப்ரல் 13 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்த நாள் விழா | பட்டுக்கோட்டை தஞ்சாவூர் மாவட்டம் |
| 20 | ஏப்ரல் 16 | வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழா | கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 21 | ஏப்ரல் 17 | தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 22 | (சித்ரா பௌர்ணமி) | வள்ளல் அதியமான் பிறந்த நாள் விழா | அதியமான் கோட்டை தருமபுரி மாவட்டம் |
| 23 | மே 7 | இராபர்ட் கால்டுவெல் பிறந்த நாள் விழா | இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம் |
| 24 | (சித்திரை இறுதி வெள்ளி) | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா | கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம் |
| 25 | (சித்திரை இறுதி வெள்ளி) | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா | பாஞ்சாலங்குறிச்சி தூத்துக்குடி மாவட்டம் |
| 26 | மே 23 | பெரும்பிடுகு முத்தரையர் பிறந்த நாள் விழா | திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 27 | மே 31 | சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன் பிறந்த நாள் விழா | வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம். |
| 28 | ஜூன் 12 | மார்ஷல் நேசமணி பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 29 | ஜூன் 16 | தியாகி விஸ்வநாததாஸ் பிறந்த நாள் விழா | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 30 | ஜூன் 18 | தியாக சீலர் கக்கன் பிறந்த நாள் விழா | மேலூர் அருகில், தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 31 | ஜூன் 23 | பட்டுக்கோட்டை அழகிரிசாமி பிறந்த நாள் விழா | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 32 | ஜூன் 24 | கவிஞர் கண்ணதாசன் பிறந்த நாள் விழா | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 33 | ஜூலை 6 | தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் பிறந்த நாள் விழா | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |
| 34 | ஜூலை 11 | வீரன் அழகு முத்துக்கோன் பிறந்த நாள் விழா | கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம் |
| 35 | ஜூலை 11 | தவத்திரு குன்றக்குடி அடிகளார் பிறந்த நாள் விழா | குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 36 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 37 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 38 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா | திருமலைச் சாலை தியாகராயர் நகர் சென்னை மாவட்டம் |
| 39 | ஜூலை 17 | தியாகி வாஞ்சிநாதன், தியாகிகள் தினம் | செங்கோட்டை, தென்காசி மாவட்டம் |
| 40 | ஜூலை 31 | சதாவதானி செய்குதம்பி பாவலர் பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 41 | (ஆடி 17 மற்றும் 18) | வல்வில் ஓரி விழா | கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம் |
| 42 | (ஆடி 18) | தீரன் சின்னமலை நினைவு நாள் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |
| 43 | (ஆடி 18) | தீரன் சின்னமலை நினைவு நாள் | தூக்கிலிடப்பட்ட இடமான சங்ககிரி, சேலம் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 44 | ஆகஸ்ட்20 | விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டி வீரன் நினைவு நாள் | பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம். |
| 45 | ஆகஸ்ட் 21 | பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 46 | ஆகஸ்ட் 25 | திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் பிறந்த நாள் விழா | காட்பாடி வட்டம், காங்கேயநல்லூர் வேலூர் மாவட்டம், |
| 47 | (ஆவணி 16) | விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் பிறந்த நாள் விழா | நெற்கட்டும் செவல், திருநெல்வேலி மாவட்டம் |
| 48 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா | ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 49 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா | திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 50 | செப்டம்பர் 5 | விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் நினைவு நாள் | விருப்பாச்சி, திண்டுக்கல் மாவட்டம் |
| 51 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | அண்ணா சதுக்கம், சென்னை மாவட்டம் |
| 52 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 53 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 54 | செப்டம்பர் 16 | இராமசாமி படையாட்சியார் பிறந்த நாள் விழா | மஞ்சக்குப்பம், கடலூர் மாவட்டம் |
| 55 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 56 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா | வைக்கம், கேரள மாநிலம் |
| 57 | செப்டம்பர் 24 | டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் பிறந்த நாள் விழா | திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 58 | செப்டம்பர் 25 | பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி பிறந்த நாள் விழா | உடுமலைப்பேட்டை திருப்பூர் மாவட்டம் |
| 59 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 60 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா | அனைத்து மாவட்டங்கள் |
| 61 | அக்டோபர் 4 | தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்த நாள் விழா | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 62 | அக்டோபர் 4 | திருப்பூர் குமரன் பிறந்த நாள் விழா | திருப்பூர், திருப்பூர் மாவட்டம் |
| 63 | அக்டோபர் 4 | திருப்பூர் குமரன் பிறந்த நாள் விழா | சென்னிமலை, ஈரோடு மாவட்டம் |
| 64 | அக்டோபர் 9 | பெரியவர் எம்.பக்தவத்சலம் பிறந்த நாள் விழா | காந்திமண்டபம் சென்னை மாவட்டம் |
| 65 | அக்டோபர் 10 | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை பிறந்த நாள் விழா | நாமக்கல், நாமக்கல் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 66 | அக்டோபர் 23 | அமுதகவி உமறுப்புலவர் பிறந்த நாள் விழா | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 67 | அக்டோபர் 24 | மருதுபாண்டியர் நினைவு நாள் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |
| 68 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா | பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம் |
| 69 | நவம்பர் 1 | கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழ்நாட்டுடன் இணைந்த நாளை முன்னிட்டு மார்ஷல் நேசமணி அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 70 | நவம்பர் 11 | சுயமரியாதைச் சுடரொளி என்.ஜீவரத்தினம் பிறந்த நாள் விழா | இராயபுரம், சென்னை மாவட்டம் |
| 71 | நவம்பர் 15 | ராவ்பகதூர் குரூஸ் பர்ணாந்தீஸ் பிறந்த நாள் விழா | தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டம் |
| 72 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 73 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 74 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா | திருவல்லிக்கேணி சென்னை மாவட்டம் |
| 75 | டிசம்பர் 12 | அதங்கோட்டாசான் விழா | அதங்கோடு, கன்னியாகுமரி மாவட்டம் |
| 76 | டிசம்பர் 28 | சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் படைத் தளபதி வீரன் பொல்லான் பிறந்த நாள் விழா | மொடக்குறிச்சி, ஈரோடு மாவட்டம் |

## அரசு சார்பில் கொண்டாடப்படும் சிறப்பு விழா

தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இணைந்து ஆண்டுதோறும் திருவள்ளுவர் பிறந்த நாளான தைத் திங்களில், திருவள்ளுவர் திருநாளையும் தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்கும் விழாவினையும் மிகச் சிறந்த முறையில் கொண்டாடி வருகின்றன. இவ்விழாவில், தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ள அறிஞர் பெருமக்களுக்குத் 'திருவள்ளுவர் விருது', 'தந்தை பெரியார் விருது', 'பேரறிஞர் அண்ணா விருது', 'அண்ணல் அம்பேத்கர் விருது', 'பெருந்தலைவர் காமராஜர் விருது', 'மகாகவி பாரதியார் விருது', 'பாவேந்தர் பாரதிதாசன் விருது', 'தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது' மற்றும் 'கி.ஆ.பெ. விசுவநாதம் விருது' உள்ளிட்ட விருதுகள் வழங்கப்பட்டு விருதாளர்கள் சிறப்பிக்கப்படுகின்றனர்.

# களவிளம்பரம்

தமிழ்நாடு அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் அனைத்துத் தரப்பு மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் விளம்பரப் பணிகளையும், தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு அரசின் நலத்திட்டங்களால் மக்கள் அடைந்துள்ள பயன்களை ஆவணப்படுத்தும் பணிகளையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, கள விளம்பரப் பிரிவு என்னும் புதிய பிரிவு இத்துறையில் உருவாக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

## மின்னணு விளம்பரத்திரைக் காட்சி வாகனம்

நவீனத் தொழில்நுட்ப முறையில் மின்னணுத் திரை பொருத்திய 32 மின்னணு விளம்பரத்திரைக் காட்சி வாகனங்கள் 32 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த மின்னணு விளம்பரத்திரைக் காட்சி வாகனங்கள், பகல், இரவு என்று எல்லா நேரங்களிலும் மக்கள் கூடும் இடங்கள், அரசு விழாக்கள் நடைபெறும் பகுதிகளில் அரசின்

திட்டங்கள், சாதனைகள், அரசின் கொள்கைகள் மற்றும் அறிவிப்புகள் குறித்த விழிப்புணர்வுக் குறும்படங்களைத் திரையிட்டு மக்கள் பணிகளைச் செவ்வனே மேற்கொண்டு வருகின்றன. ஆறு புதிய மாவட்டங்களுக்குப் புதிய மின்னணு விளம்பரத்திரைக் காட்சி வாகனங்கள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## மின்னணு விளம்பரத்திரைகள்

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்களின் தொகுப்பு கொண்ட குறும்படங்கள் தொடர்ந்து பொதுமக்கள் அதிக அளவில் நாள்தோறும் வந்து சென்றிடும் இடங்களான தலைமைச் செயலகம், 32 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், சென்னையில் உள்ள மூன்று வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் புதுதில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றில் 'மின்னணுத் திரை' (LED Screen) மூலம் திரையிடப்பட்டுக் கள விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## அலுவலர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி

தேர்ந்த அனுபவம் கொண்ட அலுவலர்கள், நெறியாளர்கள் மற்றும் மனவளக் கலை நிபுணர்கள் ஆகியோர்களைக் கொண்டு, அரசுப் பணியில் புதிய நடைமுறைகள், பணித்திறனை மேம்படுத்திட புதிய உத்திகள், நல் ஆளுமைப் பயிற்சி உள்ளிட்டவை இப்புத்தாக்கப் பயிற்சியில் பயிற்றுவிக்கப்படுவதோடு, அனைவருக்கும் மனவளக் கலைப்பயிற்சியையும் (Stress Management) இணைத்து ஆண்டுதோறும் செய்தி மக்கள் தொடர்புத்துறையில் மாவட்டங்களில் பணியாற்றும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் (செய்தி மற்றும் விளம்பரம்) ஆகியோருக்குப் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

## செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வு மதிப்பீடு

மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆற்றும் ஒவ்வொரு பணிக்கும் தனித்தனி மதிப்பெண்கள் வழங்கப்பட்டு, அவர்களின் பணிகள் மாதந்தோறும், தலைமையிட உயர்மட்ட அலுவலர்களைக் கொண்ட தனிக்குழுவினரால்

தரமதிப்பீடு செய்யப்படுகின்றன. அவற்றில் செய்தியாளர் கூட்டங்கள் நடத்துதல், செய்தியாளர் பயணங்கள் ஏற்பாடு செய்தல், நாளிதழ்களில் அரசின் வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பான வெற்றிக் கதைகள் வெளிவரச் செய்தல், வீடியோ படக்காட்சிகள் நடத்துதல், திரையரங்குகளில் அரசின் செய்தி மலர் திரையிடுவதை ஆய்வு செய்தல், சிறப்பு வெளியீடுகள் பதிப்பித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மாதந்தோறும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் சுணக்கமின்றி உற்சாகமாக மாவட்டங்களில் பணிகளைத் திறம்பட மேற்கொள்ளவும், ஏனைய பிற மாவட்டங்களோடு ஒப்பீடு செய்து, நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை எளிதாக எய்திட, உத்வேகத்துடன் பணியாற்றிடவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

# விளம்பரம்

தமிழக அரசின் சாதனைகள், திட்டங்கள், கொள்கைகள் மற்றும் சமூகநலப் பணிகளை மக்கள் முழுமையாக அறிந்து பயன்பெறும் வகையில் இத்துறையின் மூலம் நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் மின்னணு ஊடகங்கள் ஆகியவற்றில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் இதரப் பணிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி, வரைகலை மற்றும் நில எடுப்பு விளம்பரங்கள் இத்துறையின் மூலம் நாளிதழ்களில் வெளியிடப்படுகின்றன.

அரசுத் துறைகள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்களை, நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் வெளியிடும் மையமாகவும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் விளம்பரப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

விளம்பரத்தின் தன்மை மற்றும் சென்றடைய வேண்டிய பகுதி, யாருக்கு எந்தத் தகவல் சென்று சேர

வேண்டுமோ அதன் அடிப்படையில் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

**ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள்**

அரசு விளம்பரங்கள் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் கூடுதல் செலவு ஏதுமின்றி நவீன மின்னணுத் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி அனைத்து ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களையும் தேசியத் தகவல் மையத்தின் (NIC) வழியாக www.tenders.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. தேவைப்படுவோர் ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களைக் கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் அரசு நிருணயித்துள்ள கட்டணங்களில் விளம்பரங்களாக நாளிதழ்களிலும், கட்டணமின்றி இணையதளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிருவாகம் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது. இதன் பயனாக, தகுதியான அனைவரும் தமிழக அரசு கோரும் ஒப்பந்தப்புள்ளிகளில் பாகுபாடு இன்றித் தகுதிக்கு ஏற்ப பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள்

அரசின் செயல்பாடுகள் அனைத்தும் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் மற்றும் 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் இயற்றப்பட்டு, அவற்றின் அடிப்படையில் பொதுமக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில், மாவட்ட / மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள் வாரந்தோறும் வியாழக்கிழமை அன்று வெளியிடப்படுகின்றன.

ரூபாய் பத்து இலட்சத்திற்கு மேல் ரூபாய் இருபத்தைந்து இலட்சம் வரையிலான கொள்முதல் மதிப்பு மற்றும் ரூபாய் இருபத்தைந்து இலட்சத்திற்கு மேல் ரூபாய் ஐம்பது இலட்சம் வரையிலான பணிகளின் மதிப்பு ஆகியவை குறித்த ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், ரூபாய் இருபத்தைந்து இலட்சத்திற்கு மேற்பட்ட கொள்முதல் மதிப்பு மற்றும் ரூபாய் ஐம்பது இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளின் மதிப்பு ஆகியவை பற்றிய ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் வெளியிடப்படுகின்றன.

இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள் மீது மேற்கொண்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

**இணைய வழி விளம்பரங்கள்**

விளம்பரங்கள் வெளியிடுவதற்கு பெறப்படும் கோரிக்கைகள் இணைய வாயிலாகப் பெறப்பட்டு, வெளியீட்டு ஆணைகள் விளம்பர நிறுவனங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் இணைய வழியாகவே அனுப்பி வைக்க தேசியத் தகவல் மையத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# தமிழ்நாடு திரைப்படப்பிரிவு

தமிழ்நாடு திரைப்படப்பிரிவு, 1968ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு அரசின் நலத்திட்ட உதவிகளைப் பொதுமக்களுக்கு எடுத்துச்செல்லும் சிறந்ததொரு பாலமாகச் செயல்பட்டு வருகின்றது.

மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொள்ளும் அன்றாட நிகழ்ச்சிகள், சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகள் மற்றும் அரசின் அனைத்து நிகழ்ச்சிகளை வீடியோ மூலம் ஒளிப்பதிவு செய்து, அவற்றைத் தொகுத்துப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் தலைமைச் செயலகத்தின் ஊடக மையத்தின் வழியே வீடியோ செய்தி நறுக்குகளாக அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சிகளுக்குப் பதிவேற்றம் செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்டு வருகின்றது. சமூக வலைதளத்தில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்து வருகிறது.

இந்நிகழ்ச்சிகளில் முக்கியமானவற்றைப் பின்னணிக் குரல் மற்றும் இசையுடன் கூடிய செய்தித் தொகுப்புகளாகத் தயாரித்துப் பதிவேற்றம் செய்து

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களில் உள்ள மின்னணு விளம்பரத்திரைக் காட்சி வாகனம், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் உள்ள மின்னணு விளம்பரத்திரை ஆகியவற்றில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் முக்கியப் பணியாகத் தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், சாதனைகள் மற்றும் அவ்வப்போது சமூகத்தில் நிகழும் சமூக மாற்றத்திற்கேற்பப் பேரிடர் காலங்களிலும், நோய்த்தொற்றுப் பரவலின்போதும் சமூக நலன் குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வீடியோ செய்தி மலர், குறும்படங்கள் மற்றும் குறும்பாடல்களைத் தற்போது வளர்ந்துள்ள நவீனத் திரையரங்கப் பதிப்புகளாகத் தயாரித்து அனைத்து டிஜிட்டல் சினிமா திரையரங்குகள், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம், அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் உள்ள மின்னணு விளம்பரத்திரை ஆகியவற்றிற்குப் பதிவேற்றம் செய்து அனுப்பப்பட்டு ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.

## சமூக ஊடகத்தில் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

07.05.2021 அன்று புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு அரசால் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளை இத்துறை சமூக ஊடகங்களில் சிறப்பாகப் பதிவேற்றம் செய்து வருகிறது. மேலும், அரசு நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒளிப்பதிவு செய்து, பின்னணிக் குரல் மற்றும் இசையமைத்து 16.07.2021 முதல் தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் சமூகவலைதளமான வலையொளி (Tamilnadu Films Division - YouTube) மூலமாகச் செய்தித் தொகுப்புகள் உடனுடக்குடன் பதிவேற்றம் செய்யப்பட்டு, தமிழகம் மட்டுமல்லாமல் உலக மக்கள் அனைவரிடமும் விரைவாகச் சென்றடையும் விதமாக ஒளிபரப்பப்படுகிறது.

புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலமாகக் வீடியோ செய்தி மலர்கள், குறும்படங்கள் மற்றும் குறும்பாடல்கள் தயாரிக்கப்பட்டுத் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் உள்ள மின்னணு விளம்பரத்திரை மற்றும் தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் சமூக வலைதளமான வலையொளியில் (Tamilnadu Films Division - YouTube) பதிவேற்றம் செய்து ஒளிபரப்பப்படுகிறது.

# பொருட்காட்சிப் பிரிவு

தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்கள், சாதனைகள் மற்றும் செயல்பாடுகளை, அனைத்துத் தரப்பு மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் மாவட்டங்களில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பொருட்காட்சிகளில், அரசினுடைய திட்டங்கள் சிறப்பான முறையில் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கிராமம் மற்றும் நகர்ப்புற மக்கள் அரசுத் துறைகளின் திட்டங்களையும், சாதனைகளையும் அறிந்து கொண்டு, தேவையானத் தகவல்களைப் பெறுவதுடன், பொழுதுபோக்கு அம்சங்களையும் கண்டுகளித்து, மனநிறைவுடன் தங்களது இல்லத்திற்குச் செல்வதற்கு அரசுப் பொருட்காட்சிகள் வழிவகை செய்கின்றன.

அரசுப் பொருட்காட்சிகளில் மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கேற்கின்றன. இவ்வாறு அரசால் நடத்தப்படும்

பொருட்காட்சிகள், மக்களுக்குப் பொழுதுபோக்காக அமைவதோடு, நேரடியாகவும், மறைமுகமாகவும், பலருக்கு வேலைவாய்ப்பையும் அளித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம்பெறும் வகையில், நாள்தோறும் கலைநிகழ்ச்சிகள் நடத்தவும் இப்பொருட்காட்சிகளில் வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில், ஆண்டுதோறும் பத்து அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. மதுரை, கோயம்புத்தூர், சேலம், வேலூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஆறு மாவட்டத் தலைநகரங்களில் ஒவ்வொரு ஆண்டும் மற்றும் ஏனைய மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில் சுழற்சி முறையில், நான்கு மாவட்டங்களிலும் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

1978ஆம் ஆண்டு முதல் இதுவரை, செய்தி மக்கள் தொடர்புத்துறையால் 211 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு, அதன் மூலம் அரசுக்கு ஏறத்தாழ ரூபாய் முப்பத்து எட்டு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரம் நிகர வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக மார்ச் 2020 முதல் அரசுப் பொருட்காட்சிகள் ஏதும் நடைபெறவில்லை. கொரோனா தாக்கம் முடிவுற்ற பின்னர் சாதகமான சூழ்நிலை அமையப் பெற்றவுடன் அரசு விதிமுறைகளுக்கு ஏற்ப அரசுப் பொருட்காட்சிகள் சிறப்பான முறையில் நடத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## தனியார் பொருட்காட்சிகள்

மாவட்டங்களில் நடத்தப்படும் தனியார் பொருட்காட்சிகளுக்கான அனுமதி இத்துறையால் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரையுடனும், உரிய பிற துறைகளின் பாதுகாப்பு, தடையில்லாச் சான்றிதழ் மற்றும் அரசால் நிர்ணயிக்கப்பட்ட முதலமைச்சர் நிவாரண நிதிக்கான காசோலை பெறப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

## புதுதில்லி மலர்ப்பேரணி

புதுதில்லியில் ஆண்டுதோறும் தேசிய ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், மலர்ப்பேரணி விழாவில்

தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத்துறை பங்கேற்று வருகிறது.

## குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள்

புதுதில்லியில், ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு தின விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத்துறை பங்கேற்று, அந்தந்த ஆண்டுகளில் வழங்கப்படும் கருப்பொருளுக்கு ஏற்ப அலங்கார ஊர்திகளை வடிவமைத்தும், தேர்ச்சி பெற்ற கலைஞர்களைக் கொண்டு கலைநிகழ்ச்சிகள் நடத்தியும் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்து வருகிறது.

சென்னையில் நடைபெறும் குடியரசு தின விழாவில், தமிழக அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் சாதனைகளை வெளிப்படுத்தும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தனி அலங்கார ஊர்தி அமைப்பதுடன், அரசின் பல துறைகளின் சார்பில் வடிவமைக்கப்படும் அலங்கார ஊர்திகளின் வடிவமைப்புகள் மற்றும் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு ஆகியவற்றின் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இத்துறையின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும்.

## அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் வர்த்தகப் பொருட்காட்சி

ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் வர்த்தகப் பொருட்காட்சியில், செய்தி மக்கள் தொடர்புத்துறை தொடர்ந்து பங்கேற்று, அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளைப் பொதுமக்கள் எளிதில் அறிந்திடும் வகையிலும், விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையிலும் சிறப்பான முறையில் அரங்குகள் அமைத்துப் பாராட்டுகள் பெற்று வருகிறது.

## புதுதில்லி பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி

புதுதில்லியில், ஆண்டுதோறும் நடைபெறும் அகில இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில், தமிழ்நாடு அரசு சார்பில் செய்தி மக்கள் தொடர்புத்துறை ஒவ்வொரு ஆண்டும் பங்கேற்று, தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் தொடர்பான சாதனைகள், திட்டப்பணிகள், கொள்கை விளக்கங்கள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் குறித்த விளக்கப் புகைப்படங்கள் மற்றும் காட்சிப் பொருட்களை, காண்போரைக் கவரும் வகையில் அமைத்து, அனைத்துத் தரப்பு மக்களும் தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் மற்றும் சிறப்புகளை அறிந்துகொள்ளவும், பயனாளிகள் நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கான

வழிமுறைகளை அறியும் வகையிலும் அரங்குகளை அமைத்து வருகிறது.

இந்தியாவிலுள்ள பிற மாநிலங்கள், தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளை அறிந்துகொள்ள ஒரு நல்ல வாய்ப்பாக, அகில இந்திய அளவில் நடைபெறும் இப்பொருட்காட்சி அமைந்துள்ளது. மேலும், நம் மாநில மகளிர் சுயஉதவிக் குழுக்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்களை விற்பனை செய்ய, நாடு தழுவிய அளவில் வணிக வாய்ப்பு அமைத்துக் கொடுக்கப்படுகிறது.

## ஊராட்சி ஒன்றியங்களில் கண்காட்சிகள்

தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் குறித்துப் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் சென்னை மாவட்டத்தைத் தவிர்த்து, பிற மாவட்டங்களில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும், ரூபாய் பத்தாயிரம் வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசின் சாதனைகளை விளக்கும் வகையில், சிறு கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

## சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி

தமிழ்நாடு அரசின் சாதனைகளைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு, சென்னை மாவட்டம் உட்பட, அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டிற்கு

ஒருமுறை அரசு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி நடத்த, மாவட்டம் ஒன்றிற்குத் தலா ரூபாய் பத்தாயிரம் வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## திருவிழாக்கள் மற்றும் அரசு விழாக்களில் சிறப்புப் புகைப்படக் கண்காட்சி

மாவட்டங்கள்தோறும் திருவிழாக்கள் மற்றும் அரசு விழாக்களில் அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்துப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்புகைப்படக் கண்காட்சிகள் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை அனைத்துத் தரப்பு மக்களும் அறிந்து பயன்பெறுவதற்கு ஒரு நல்வாய்ப்பாக அமைகிறது.

## அரசுப் பொருட்காட்சிகளில் நடத்தப்படும் விழிப்புணர்வு நாடகங்களுக்கான மதிப்பூதியம்

நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம்பெறும் வகையில் அரசுப் பொருட்காட்சிகளில் நடத்தப்படும் விழிப்புணர்வு நாடகங்களுக்கு மதிப்பூதியமாக ரூபாய் ஐந்தாயிரம் வழங்கப்பட்டு வருகிறது.

# மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

தமிழகத்தின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்களில் செயல்படும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் இன்றியமையாத அங்கமாகும். அரசின் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் கொண்டு செல்லும் சிறப்பான பணிகளை மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் (செய்தி), உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் (விளம்பரம்) மற்றும் தேவையான ஊழியர் கட்டமைப்புடன் இயங்கிவரும் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் அரசினால் செயல்படுத்தப்படும் மக்கள் நலத்திட்டங்கள், அரசின் சாதனைகள், புதிய அறிவிப்புகள் ஆகியவற்றை உடனுக்குடன்

மக்களுக்குக் கொண்டுசெல்லும் பணியைச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றன. மேலும், அரசின் திட்டங்கள் அனைத்தும் அனைத்துத் தரப்பு மக்களிடமும் எடுத்துச் சென்றிடும் வகையில், நாளிதழ்கள், ஊடகங்கள், மின்னணு விளம்பரத் திரை காட்சி வாகனப் படக்காட்சிகள், புகைப்படக் கண்காட்சிகள் ஆகியவற்றின் வாயிலாக, களவிளம்பரப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்கும் அரசு விழாக்களுக்கான முன்னேற்பாடு, செய்தியாளர் சந்திப்பு மற்றும் பயண ஏற்பாடு, தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனம் வாயிலாக விளம்பரப்பணி, பல்துறை விளக்கக் கண்காட்சிகள், வரலாற்றுத் தலைவர்களின் நினைவகங்களைப் பராமரித்தல் உள்ளிட்ட பல முக்கியப் பணிகளையும் மேற்கொண்டு, அரசின் மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளை மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## செய்தி நிலையங்கள்

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கட்டுப்பாட்டில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்துர் மற்றும் புதுதில்லி ஆகிய இடங்களில் செய்தி நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

செய்தி நிலையங்களில் மொழி, இலக்கியம், வரலாறு, அறிவியல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் நூல்கள், நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன. மேலும், இச்செய்தி நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள புத்தகங்களை ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், பள்ளி, கல்லூரி மாணவ–மாணவியர் பயன்படுத்திப் பயனடைந்து வருகிறார்கள்.

## சென்னை – மாநிலச் செய்தி நிலையம்

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ், மாநிலச் செய்தி நிலையம் சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மாநிலச் செய்தி நிலையத்தில் அனைவரும் படித்துப் பயன்பெறும் வகையில், ஓர் நூலகம் செயல்பட்டு வருகிறது. இந்நூலகம் அரசு விடுமுறை நாட்கள் தவிர்த்து அனைத்து வேலை நாட்களிலும் காலை 9.45 மணி முதல் மாலை 5.45 மணி வரை செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்தில் தமிழ்மொழி இலக்கியம், அறிவியல், ஆய்வுக் கட்டுரைகள், சட்டம், மருத்துவம், உளவியல், ஆன்மீகம், ஜோதிடம், உடற்பயிற்சி, யோகா, வரலாறு, அரசியல், பண்பாடு, தலைவர்களின் வாழ்க்கை வரலாறு உள்ளிட்ட நூல்கள், நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் மற்றும் அனைத்து விதமானப் போட்டித் தேர்வுகளுக்குத் தேவையான குறிப்புகள் அடங்கிய நூல்கள் எனப் பல்வேறு தலைப்புகளில் தமிழ் மற்றும் ஆங்கில வடிவில் சுமார் 67,000 நூல்கள்

இடம்பெற்றுள்ளன. இந்நூல்களைப் பொதுமக்கள், அறிஞர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள், மாணவ, மாணவியர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் படித்துப் பயன்பெறும் வகையில் அமைதியான சூழ்நிலையில் இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இந்நூலகத்தில் தமிழ், ஆங்கில நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்கள் படித்துப் பயன்பெறுவதற்காக வைக்கப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை நடவடிக்கை தொடர்பான குறிப்புகள், பேரவை வெளியீடுகள், அரசுத்துறை வெளியீடுகள் ஆகியவை தொகுக்கப்பட்டு மேற்கோள் பணிக்காகச் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் தங்கள் கல்விக்குத் தேவையான குறிப்புகள் எடுக்கவும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் நடத்தப்படும் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, வினாடி வினா போன்ற பல்வேறு இலக்கியப் போட்டிகளில் பங்கேற்றிடத் தேவையான குறிப்புகள் எடுக்கவும் இந்நூலகத்திற்குப் பெருமளவில் வருகை புரிகின்றனர்.

மேலும், போட்டித் தேர்வுகளில் பங்குபெறும் மாணவர்களின் பயன்பாட்டிற்காகப் பல்வேறு வகைப் போட்டித் தேர்வு நூல்கள் சிறப்பான முறையில் இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

அரசின் பல்வேறு துறைகள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் பயன்பாட்டிற்காக இரண்டு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட நாளிதழ்களும் மற்றும் காலமுறை இதழ்களும் இங்கு பாதுகாத்து வைக்கப்பட்டு வருகின்றன.

இம்மாநிலச் செய்தி நிலைய நூலகத்தில் பல்வேறு பதிப்பகங்களின் வாயிலாக வெளியிடப்படும் புத்தகங்களின் இரண்டு பிரதிகள் பதிப்புரிமைப் பதிவுப் பணிக்காகப் பெறப்பட்டு, அந்நூல்களில் இடம்பெற்றுள்ள பதிப்புரிமை தொடர்பான தகவல்கள் மட்டும் முறையாகப் பதிவுசெய்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வலுவலக நூலகத்தில் சுமார் 67,000 நூல்கள் இடம்பெற்றுள்ளதால், இங்கு வருகைதரும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர், பொதுமக்கள் தாங்கள் தெரிவுசெய்து படிக்க விரும்பும் குறிப்பிட்ட நூல்களை விரைவாகவும் எளிதாகவும்

தேர்ந்தெடுக்கும் வகையில், சுமார் ரூபாய் மூன்று இலட்சத்து அறுபதாயிரம் மதிப்பீட்டில் நவீன மென்பொருள் மற்றும் இணையதள வசதியுடன் தமிழ்நாடு மின்பணியாக்கக் கழகம் மூலமாக இந்நூலகத்திலுள்ள 63,000 நூல்களின் விவரங்கள் நவீன மயமாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருவது இந்நூலகத்தின் தனிச் சிறப்பம்சமாகும்.

மேலும், இந்நூலகத்திலுள்ள அரிய வகை நூல்கள் தமிழ்நாடு அரசின் இணையக் கல்விக் கழகத்தின் வாயிலாக மின்னுருவாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

# தமிழரசு

தமிழ்நாடு அரசாங்கத்தின் பல்வேறு துறைகள், தத்தம் ஆக்கப் பணிகளை எடுத்துக்காட்டும் வகையில் வெளியிடப்பட்டு வந்த பல இதழ்கள் அனைத்தையும் அரசு இதழாகத் "தமிழரசு" எனும் பெயரில் ஜூலை 1, 1970இல் முதல் மாத இதழாக அப்போதைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் உருவாக்கினார்கள்.

பல்வேறு தனியார் அச்சகங்களில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட தமிழரசு இதழுக்குச் சொந்தமாக ஒரு அரசு அச்சகம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1972ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஓமந்தூரார் அரசினர் தோட்டம் வளாகத்தில் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வந்த தமிழரசு அச்சகம், தற்பொழுது சென்னை தரமணியில் செயல்பட்டு வருகிறது.

தமிழரசு இதழ், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டு 50ஆவது ஆண்டான பொன்விழா ஆண்டிலும் தமிழரசு இதழ் தன்னுடைய பணியைச் சிறப்புடன் செய்து வருகின்றது. தற்போது, "தமிழரசு" இதழ் தமிழ் மற்றும்

ஆங்கிலத்தில் மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது. அரசு செயல்படுத்தும் அனைத்து நலத்திட்டங்களையும், சாதனைகளையும் தொகுத்து இதழ் வடிவில் வெளியிடுவதால், இது ஒரு அச்சு ஊடகமாகத் திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதல் "தமிழரசு" இதழுக்கு 27-6-1970 அன்று வழங்கிய வாழ்த்துச் செய்தியில்

'தமிழரசு' தமிழர்தம் தங்கக்கரங்களைத்
தழுவிடுகின்றது
அயராது உழைத்து அனைத்துத் துறையிலும்
அரசு விளைத்திடும் வெற்றிகளை
குவிக்கின்ற தகவல்களைத் தந்திடும் இந்த ஏடு!

சிதறிக்கிடந்த பல்வேறு துறை இதழ்களின் இணைப்பு
இது!
கட்டுரைகள்-கருத்து நிறை கதைகள்-கவிதைகள்
அனைத்தும் கலைமணம் கமழ-ஓவியச் சிறப்புக்கள்
தாங்கி,
திங்கள் இருமுறை தங்களைச் சந்திக்கும்.
உழைப்புக்கும் ஊக்கம் -
களைப்புக்கு ஆறுதல் -

நினைப்புக்குத் தெம்பு –
நெஞ்சுக்கு வலிவு –
இந்தத்  'தமிழரசு' தவறாது வழங்கும்
வண்ணம் நிறைந்து, எண்ணம் பொதிந்து
வனப்புக்குள் ஏடாக இதனைக் காணவேண்டுமென்ற
என் ஆசைகளை
செய்தித்துறையினர் நிறைவேற்ற முனைந்துள்ளனர்.

முதல் இதழ் உங்கள் கைகளில்!
நான் வெளிநாட்டில்!
திரும்பியதும் திங்கள் இருமுறை

தித்திக்கும் எழுத்துக்கள் சிலவற்றை நானும் தர
முயல்வேன் இந்த இதழ் வாயிலாக! உங்கள்
வாழ்த்துக்கள் என் காதுகளில் ஒலிக்கின்றன!
நெஞ்சில் கரைகின்றன

வாழ்க தமிழரசு!
வணக்கம்!
**– கலைஞர் மு. கருணாநிதி**

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் "தமிழரசு" இதழ், மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரைகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகளின் தொகுப்புகள், அனைத்துத் துறைகளின் சார்பில் அறிவிக்கப்பட்ட

திட்டங்கள், அனைத்துத் துறை சார்ந்த அறிவிப்புகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த விரிவான கட்டுரைகள், மாநிலம் முழுவதிலும் அரசு நலத் திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளின் நேர்காணல்கள் அடங்கிய வெற்றிக்கதைகள் போன்றவற்றை உள்ளடக்கி அனைத்துத் தரப்பினரும் படித்துப் பயனடைந்திடும் வகையில் வெளியிடப்பட்டு வருகின்றன.

புதிய அரசு பொறுப்பேற்று நூறு நாள் சாதனைகளையும் பல்வேறு துறைகளின் சார்பாக எடுக்கப்பட்ட முன்னெடுப்புகளையும் தொகுத்து "நூற்றாண்டின் திசையில் நூறு நாள்" என்ற சிறப்பு மலர் வெளியிடப்பட்டது.

## இணையதளத்தில் பதிவு செய்தல்

'தமிழரசு' மாத இதழினைத் தற்போது பொதுமக்கள், அரசு அலுவலகங்கள், அரசு நூலகங்களின் வாசகர்கள் மற்றும் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் அதிக அளவில் வாசிக்கின்றனர். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்கள் தமிழரசு அலுவலகத்திற்கு நேரிடையாக வந்து இதழினை வாங்கிச் செல்கின்றனர். புதிய

வாசகர்களுக்காகவும், சந்தாதாரர்கள் சந்தாவினைப் புதுப்பித்துக்கொள்ள ஏதுவாகவும் **www.tamilarasu.org** என்ற இணையதளம் அறிமுகம் செய்யப்பட்டு, இணையதளத்தின் வாயிலாகச் சந்தாதாரராகப் பதிவுசெய்து தமிழரசு மாத இதழ்களைத் தபால் வழியாகப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழரசு தமிழ் மற்றும் ஆங்கில இதழ்கள் தலா ஒன்றின் விலை இருபது ரூபாயாகவும், ஆண்டுச் சந்தா இருநூற்று நாற்பது ரூபாயாகவும், ஆயுள் சந்தா தமிழ் (10 ஆண்டுகள்) இரண்டாயிரம் ரூபாயாகவும், ஆங்கிலம் (10 ஆண்டுகள்) இரண்டாயிரத்து நானூறு ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாகச் சிறு தொலைபேசிக் கையேடு 2021 அச்சிடப்பட்டு, அனைத்துத்துறை அரசுச் செயலர்களுக்கும், உயர் அலுவலர்களுக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. மேலும், பொதுமக்களுக்கு ரூபாய் பதினைந்து வீதம் விற்பனை செய்யப்படுகிறது.

# தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் திரைப்படத் தயாரிப்பு, தொழில்நுட்பக் கல்வி நுணுக்கங்கள் மற்றும் கலை உணர்வுகளைப் பயிற்றுவிக்கும் முதன்மை நிறுவனமாக விளங்கி வருகிறது. இந்நிறுவனத்தில் பலதரப்பட்ட திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் பிற திரைப்படத் துணைப்பாடங்களையும் மாணவர்களுக்குக் கற்றுத் தருவதே முக்கிய இலக்காகும்.

தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் இந்நிறுவனம் 15.25 ஏக்கர் நிலப்பரப்பில் செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே திரைப்படத்

தொழில்நுட்பங்களுக்கான பட்டப்படிப்புகளைக் கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம் இந்நிறுவனமாகும்.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் ஒரு நீண்ட நெடிய வரலாற்றினைக் கொண்டது. கடந்த 1945ஆம் ஆண்டு முதல் மத்திய பல்தொழில்நுட்பப் பயிற்சி மையத்தில் ஓர் அங்கமாக இருந்து, 1960ஆம் ஆண்டு ஒரு தனிப் பயிற்சி நிறுவனமாக மாற்றப்பட்டது. 09.08.2021 முதல் இத்திரைப்படக் கல்விக்கூடம் "தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்" (Tamil Nadu Government M.G.R. Film and Television Institute) என்று அழைக்கப்படுகிறது. இந்நிறுவனம் 1964ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ஆம் தேதி முதல் தற்போது உள்ள வளாகத்தில் 50 ஆண்டுகளையும் கடந்து செவ்வனே சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் பொன்விழா முகப்பு வளைவும், பாரத ரத்னா டாக்டர். எம்.ஜி.ஆர். அவர்களின் மார்பளவு சிலையும் இந்நிறுவன வளாகத்தில் நிறுவப்பட்டன.

இந்தியாவிலேயே ஒரு மாநில அரசால் துவங்கப்பெற்று இயங்கிவரும் திரைப்படம் மற்றும்

தொலைக்காட்சிக்கான கல்லூரி தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் மட்டுமே ஆகும். கடந்த 50 ஆண்டுகளாக இந்நிறுவனத்தில் பயிற்றுவிக்கப்பட்டு வந்த பட்டயக் கல்விகள் 2016–2017ஆம் கல்வி ஆண்டு முதல் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழக அங்கீகாரத்துடன் இந்தியாவிலேயே முதன் முறையாக இளங்கலை–காட்சிக்கலை எனும் பட்டப்படிப்புகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

**பட்டப்படிப்புகள்**

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம், அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக்குழு (AICTE) அங்கீகாரத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டு நடத்தப்பட்ட பட்டயப் படிப்புகள், 2016–2017ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நான்காண்டு இளங்கலை காட்சிக்கலைப் பட்டப்படிப்புகளாக (Bachelor of Visual Arts) மாற்றப்பட்டுப் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

ஏப்ரல் 2018 வரை வழங்கப்பட்ட Diploma in Film Technology (DFT) என்ற பட்டயத்திற்குப் பதிலாக 2016−2017ஆம் கல்வியாண்டில் சேர்ந்து, 2019−2020இல் Bachelor of Visual Arts (BVA) என்ற பட்டப்படிப்பினை நிறைவு செய்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் பின்வரும் பட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1 | **இளங்கலை காட்சிக்கலை (ஒளிப்பதிவு)** | **–** | **Bachelor of Visual Arts (Cinematography)** |
| 2 | **இளங்கலை காட்சிக்கலை (எண்மிய இடைநிலை)** | **–** | **Bachelor of Visual Arts (Digital Intermediate)** |
| 3 | **இளங்கலை காட்சிக்கலை (ஒலிப்பதிவு)** | **–** | **Bachelor of Visual Arts (Audiography)** |
| 4 | **இளங்கலை காட்சிக்கலை (இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல்)** | **–** | **Bachelor of Visual Arts (Direction and Screenplay Writing)** |
| 5 | **இளங்கலை காட்சிக்கலை (படத்தொகுப்பு)** | **–** | **Bachelor of Visual Arts (Film Editing)** |
| 6 | **இளங்கலை காட்சிக்கலை (உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன்)** | **–** | **Bachelor of Visual Arts (Animation and Visual Effects)** |

## மாணவர் சேர்க்கை

ஒவ்வொரு கல்வியாண்டிலும், 14 மாணவர்கள் வீதம் ஆறு பாடப்பிரிவுகளுக்கும் 84 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். பட்டப் படிப்புகளுக்குரிய கல்விக் கட்டணமாக ரூபாய் பதினைந்தாயிரம், சிறப்புக் கட்டணமாக ரூபாய் இரண்டாயிரம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் ரூபாய் ஆயிரமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் முழுவதும் விலக்களிக்கப்பட்டு வருகிறது.

## மாணவர்கள் தயாரிக்கும் படங்களுக்கு நிதியுதவி

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்குக் குறும்படம் தயாரிக்க அளிக்கப்படும் நிதியுதவியைத் தமிழ்நாடு அரசு 2017–2018ஆம் ஆண்டுமுதல் ரூபாய் பதினைந்தாயிரத்திலிருந்து ரூபாய் ஐம்பதாயிரமாக உயர்த்தி வழங்கியுள்ளது. கல்வி இறுதியாண்டில் குறும்படங்கள் தயாரிக்கப்படுவதற்கான பயிற்சி, ஆறு துறைகளிலும் பயிலும் மாணவர்களைக் கொண்ட 14 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் ஒரு குறும்படம் வீதம் 14 குறும்படங்கள்

தயாரிக்கத் தேவையான அனைத்துப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

## குறும்பட விருது

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்படும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர் மற்றும் சிறந்த படப்பதனிடுபவர் ஆகியோர் வல்லுநர் குழுவால் தேர்வு செய்யப்பட்டு, "தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்குக் குறும்பட விருது" என்ற பெயரில் விருதும், தலா ஒரு பவுன் தங்கப்பதக்கம், நினைவுக் கேடயம் மற்றும் ரூபாய் ஐந்தாயிரம் ரொக்கப் பரிசும் வழங்கப்படுகிறது.

## மாணவர்களுக்கு நவீனத் தொழில்நுட்பத்தில் பயிற்சி

தற்போதைய நவீனத் தொழில் நுட்பத்திற்கேற்ப, மாணவர்களின் குறும்படங்கள் மற்றும் செயல்முறைப் பயிற்சிக்காக, திரைத்துறைக்கு இணையாக நவீனத் தொழில்நுட்பக் கருவிகளை வாடகை அடிப்படையில்

எடுத்து மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இந்நிறுவனத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் உலகத்தரத்திலான சிறந்த பயிற்சியை வழங்குவதற்கும் இத்துறை தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும்.

# திரைப்படம், வீடியோ மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பு

தமிழ்நாட்டில் உள்ள மிகப் பெரிய தொழில்களில் திரைப்படத் தொழிலும் ஒன்றாகும். மேலும், இந்தியாவில் அதிக அளவில் திரைப்படங்கள் உருவாக்கும் மாநிலங்களில் தமிழ்நாட்டில் உள்ள திரைப்படத் துறையும் ஒன்றாகும். அரசுக்கும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வருவாய் ஈட்டித் தருகின்ற துறைகளில் ஒன்றாகத் திரைப்படத் தொழில் விளங்குகிறது. திரையரங்குகளில் படம் பார்ப்பது பெரும்பான்மை மக்களின் முக்கியமானதொரு பொழுதுபோக்கு அம்சமாக, நமது மாநிலத்தில் இருந்து வருகிறது. எனவே, திரைப்படத் துறையின் பல்வேறு விதமான வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் அரசு பல்வேறு சலுகைகளையும் மற்றும் மானியமும் வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் 942 திரையரங்குகள் இயங்கி வருகின்றன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:–

| வ. எண் | வகைகள் | திரையரங்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நிரந்தரத் திரையரங்குகள் | 914 |
| 2 | பகுதி நிரந்தரத் திரையரங்குகள் | 22 |
| 3 | நடமாடும் திரையரங்குகள் | 05 |
| 4 | திறந்த வெளித் திரையரங்குகள் | 01 |
| | **மொத்தம்** | **942** |

திரையரங்குகளில் திரைப்படம் திரையிடுவதற்குச் சான்றளிக்கவும், திரையிடுவதை முறைப்படுத்தவும், திரையரங்குச் சட்டம், 1952 (மத்திய சட்டம் XXXVII/1952) இயற்றப்பட்டது. திரைப்படத் துறையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு, தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் 1955, தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டுள்ளது. திரையரங்குகளில் திரைப்படங்கள் வெளியிடுவதற்குத் தனியாருக்கு உரிமம் வழங்குவதற்கு இச்சட்டம் வழிவகை செய்கிறது. மேற்கண்ட சட்டப் பிரிவுகளின்படி, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை காவல்துறை ஆணையரும் உரிமம் வழங்கும் அலுவலராகச் செயல்படுகின்றனர். இணை ஆணையர், நிலநிர்வாகத் துறை அவர்கள் மேல்முறையீட்டு அலுவலராகவும், அவரது முடிவை சீராய்வு மேற்கொள்ளும் அதிகாரம் இச்சட்டப் பிரிவுகளின்படி அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

திரையரங்குகளில் திரைப்படம் காண வருகின்ற பொதுமக்களுக்குக் கட்டிட நிலைப்புத் தன்மையுடன் கூடிய அடிப்படை வசதிகள், முறையான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் அமைகின்ற வகையில் 1957ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகளில் வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த விதிகளின் கீழ் அரசு பார்வையாளர்களின் அனுமதிக் கட்டணத்தை நிர்ணயிக்கிறது.

## கம்பிவடத் தொலைக்காட்சிக் கட்டமைப்பு

இந்தியா முழுவதும் உள்ள கம்பிவடத் தொலைக்காட்சிக் கட்டமைப்பினை 1995ஆம் ஆண்டு கம்பிவடத் தொலைக்காட்சிக் கட்டமைப்புச் (முறைப்படுத்துதல்) சட்டம் (மத்திய சட்டம் 7/1995) முறைப்படுத்துகிறது. மேற்சொல்லப்பட்ட சட்டத்தின்படி, மாவட்ட மற்றும் உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டுகள் மற்றும் மாநகரக் காவல் துறை ஆணையாளர் ஆகியோர் இச்சட்டத்தின் 3, 4A, 5, 6, 8, மற்றும் 9 (அல்லது) 10 ஆகிய பிரிவுகளை மீறும், கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, தமிழக அரசு சென்னை, திருச்சி, திருநெல்வேலி, மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய

மாநகரங்களில் மாநகரக் காவல்துறை ஆணையாளர்கள், மாவட்டங்களைப் பொறுத்தளவில் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்களை கம்பிவடத் தொலைக்காட்சி சட்டத்தில் உள்ள நிபந்தனைகள் மற்றும் வழிமுறைகளை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமித்து அறிவிக்கை வெளியிட்டுள்ளது. மேலும், கம்பிவடத் தொலைக்காட்சி (முறைப்படுத்துதல்) சட்டத்தினை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், மாநகரக் காவல் ஆணையாளர்கள் மற்றும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## வீடியோ சட்டமும் விதிகளும்

தமிழ்நாட்டில், வீடியோ கேசட் பதிவுக் கருவிகளைப் பயன்படுத்தித் திரைப்படங்களைத் தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்பு செய்வதை முறைப்படுத்தும் பொருட்டு, 1984–ஆம் ஆண்டைய தமிழ்நாடு வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மற்றும் கேபிள் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில்

திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியார்களுக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில், காவல்துறை ஆணையாளரும் உரிமம் வழங்கும் அதிகாரிகள் ஆவர்.

## அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு

திருட்டு வீடியோ நாடாக்கள் சம்மந்தமான குற்றங்களைத் தடுப்பதற்கு 1957ம் வருடத்திய மத்திய சட்டமான பதிப்புரிமைச் சட்டம் காவல்துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கியது. திரைப்படம், இசை மற்றும் இதர வகைகளின் சட்டவிரோதமான செயல்களைத் தடுப்பதற்கு இச்சட்டத்தின் முலம் வகை செய்யப்படுகிறது. அதிகபட்ச தண்டனை இரண்டு வருடங்கள் கடுங்காவல் மற்றும் ரூபாய் இரண்டு இலட்சம் அபராதமாகும். இரண்டாவது தடவையாகக் குற்றம் செய்பவருக்குக் கூடுதல் தண்டனையாக ஒரு வருடத்திற்குக் குறையாமலும் மூன்று வருடங்கள் வரையிலும் மற்றும் அபராதத்தொகையாக ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் குறையாமலும் ரூபாய் இரண்டு இலட்சம் வரையிலும் விதிக்கப்படுகிறது. பதிப்புரிமைச் சட்டம் 1957 சட்டப் பிரிவு 52(ஆ)ல் விளக்கப்படுகின்ற படம் மற்றும்

ஒலிப்பதிவு சம்மந்தமான குற்றங்கள், புகார் இல்லாவிடினும் தன்னிச்சையாகப் பதிப்புரிமைச் சட்டம் 1957 சட்டப் பிரிவு 68(ஆ)ன் கீழ் மூன்று வருடங்கள் வரை தண்டிக்கப்படக்கூடிய குற்றங்கள் என்ற விபரங்கள் சேர்க்கப்பட வேண்டும். சட்டப்பிரிவு 51ன் கீழ் பதிப்புரிமைகளாகக் கூறப்படுபவை மீறப்படும் போது, அவை பிரிவு 63ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் ஆகும், இது ஆறுமாதம் முதல் மூன்று ஆண்டுகள் சிறைதண்டனையும் ரூபாய் ஐம்பதாயிரத்திற்குக் குறையாத மற்றும் ரூபாய் இரண்டு இலட்சம் வரை அபராதம் விதிக்கத்தக்க குற்றமாக அமையும். பிரிவு 64ன் கீழ் வரும் குற்றச்செயல்கள் தொடர்புடைய பொருட்களை, உதவி ஆய்வாளர் படி நிலைக்குக் குறையாத காவல் அலுவலர்கள் தேடிக் கைப்பற்றுகை செய்திடலாம்.

காவல் துறைக் கூடுதல் தலைமை இயக்குநரின் (குற்றம்) நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ், குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையில் அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு இயங்கி வருகிறது. காவல் துறைக் கூடுதல் தலைமை இயக்குநருக்கு உதவி செய்யும் பொருட்டு மாநில அளவில் ஒரு காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் தற்போது சென்னை (2), புனித

தோமையார் மலை (1), வேலூர் (1), சேலம் (1), கோயம்புத்தூர் (1), திருச்சி (1), கடலூர் (1), மதுரை (1), திண்டுக்கல் (1), விருதுநகர் (1) மற்றும் திருநெல்வேலி (1) ஆகிய பன்னிரண்டு இடங்களில் வீடியோ திருட்டுத் தடுப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. 1957ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டம் மற்றும் 2000ஆம் ஆண்டு தகவல் தொழில் நுட்பச் சட்டம் ஆகியவை தொடர்பான சட்ட விதி மீறல்களைத் தடுக்கவும் இப்பிரிவு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**புதிய தமிழ்த் திரைப்படங்களைச் சட்டவிரோதமாகக் கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவில் ஒளிபரப்பு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம்**

கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவில் புதிய திரைப்படங்கள் சட்ட விரோதமாகத் திரையிடப்படுவதாகத் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் அளித்த தகவலின் அடிப்படையில் தமிழகம் முழுவதும் தீவிர சோதனைகள் நடத்தப்பட்டு 37 வழக்குகள், சென்னை (அலகு–2), புனித தோமையர் மலை, வேலூர், கடலூர், திருச்சி, திண்டுக்கல், விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப்பிரிவினர் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ரூபாய் மூன்று இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து இருநூற்று ஐம்பது

மதிப்பிலான ஒளிபரப்புச் சாதனங்கள் கைப்பற்றப்பட்டு 44 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

## 2021 ஆண்டிற்கான புதிய முயற்சிகள்

## திருட்டு வீடியோவைக் குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

(i) அறிவுசார் சொத்துரிமைப் பிரதிநிதிகள், இந்திய இசைத் தொழில் பிரதிநிதிகள் மற்றும் திரைப்பட ஒளிப்பதிவுப் பிரிதிநிதிகள் மூலம் திருட்டு வீடியோ ஒழிப்பு அதிகாரிகளுக்குத் தலைமையிடத்தில் தொழில்நுட்பம் சார்ந்த சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

(ii) திரையரங்கில் வெளியிடப்படும் புதிய படங்களைத் திருட்டு வீடியோ எடுப்பதை, கியூப் தொழில் நுட்பத்தின் உதவியுடன், பகுப்பாய்வு செய்து, திரைப்பட ஒளிப்பதிவுச் சட்டத்தின்படி வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

(iii) சட்டத்திற்குப் புறம்பாக உரிமம் பெறாமல் புதிய படங்களை ஒளிபரப்புச் சாதனங்கள் மூலம் கேபிள் டி.வி.யில் ஒளிபரப்பு செய்யும் கேபிள் டிவி இயக்குபவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(iv) குற்றவாளிகளின் நடவடிக்கைகள் தொடர்ந்து அலகு ஆய்வாளர்களாலும், தலைமையிட அதிகாரிகளாலும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

(v) சட்டத்திற்குப் புறம்பாகத் திரையங்கத்தில் திரையிடப்படும் படங்களை வீடியோ கேமராமூலம் பதிவு செய்து திருட்டு வீடியோக்களை வெளியிடும் திரையரங்க உரிமையாளர்கள் மற்றும் ஆப்பரேட்டர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(vi) விமானம் மற்றும் சுங்கத்துறை அதிகாரிகளுடன் இணைந்து செயலாற்றி வெளிநாட்டிலிருந்து கடத்தி வரப்படும் திருட்டு வீடியோ குறுந்தகடுகளின் நடமாட்டத்தை முற்றிலும் ஒழிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

(vii) வீடியோக் கடை உரிமையாளர்களுடன் காலமுறைப்படி கலந்துரையாடல் கூட்டம் ஏற்பாடு செய்து, திருட்டு வீடியோவை விற்கக்கூடாதென அறிவுறுத்தப்பட்டது.

(viii) பொதுமக்கள் பயணிக்கும் சுற்றுலாப் பேருந்துகளில் உரிமம் இல்லாத புதிய படங்களை ஒளிபரப்புவதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவினால் 2010ஆம் ஆண்டு முதல் 2021ஆம் (31.07.2021) ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, அவ்வழக்குகளில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் மதிப்பு முதலிய விவரங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன :–

**திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் குறித்த விபரம் 2010 முதல் 31.07.2021 வரை**

| வருடம் | பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை | கைப்பற்றப் பட்ட சொத்தின் மதிப்பு (ரூபாய்) | கேபிள் தொலைக் காட்சி நடத்துபவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2010 | 2690 | 2664 | 14,38,31,530 | 34 |
| 2011 | 2665 | 2648 | 10,78,74,745 | 9 |
| 2012 | 2858 | 2838 | 14,36,05,175 | 2 |
| 2013 | 3020 | 3004 | 36,57,57,107 | 2 |
| 2014 | 3320 | 3320 | 17,75,02,306 | 29 |
| 2015 | 3406 | 3406 | 11,65,23,631 | 51 |
| 2016 | 4893 | 4906 | 26,14,13,385 | 21 |
| 2017 | 5589 | 5591 | 51,24,96,880 | 13 |
| 2018 | 3102 | 3076 | 8,85,28,841 | 29 |
| 2019 | 762 | 710 | 3,37,19,738 | 18 |
| 2020 | 292 | 52 | 1,16,13,631 | 35 |
| 2021 (31.07.21 வரை) | 122 | | 54,60,448 | 2 |
| மொத்த வழக்குகள் | 32719 | – | – | 245 |

# திரைப்படத்துறையினர் நலவாரியம்

அகில இந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் மாநாட்டில் அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் 9.10.2009 அன்று உரையாற்றியபோது, "தொழிலாளர் சமுதாயத்தின் நலன்களை உறுதிப்படுத்திடும் வகையில், அரசின் சார்பில் பல்வேறு அமைப்புசாராத் தொழிலாளர் நலவாரியங்கள் உருவாக்கப்பட்டு, அந்த வாரியங்களின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில், தமிழ்த் திரையுலக வளர்ச்சியிலும், அதன் வாழ்விலும் பல்வேறு நிலையில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் கலையுலகத்தினரின் நலன்களுக்காகத் தனி நலவாரியம் அமைக்கப்பட வேண்டுமெனத் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பிலும் தமிழ்த் திரையுலகின் சார்பிலும் அளிக்கப்பட்டுள்ள கோரிக்கையினை ஏற்றுத் தமிழ்நாடு அரசு சின்னத் திரையினருக்கும் சேர்த்துத் திரைப்படத்துறையினர் நலவாரியம் ஒன்றினைப் புதிதாக உருவாக்கும்" என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பின்படி அரசாணை (நிலை) எண்.324, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (தி.தொ.2)த்துறை, நாள் 28.10.2009 திரைப்படத்துறையினர் நலவாரியம் ஒன்றினை உருவாக்க ஆணைகள் வெளியிடப்பட்டன.

அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாகத் திரைப்படத் துறையினர் நலவாரியத்தில் செய்தித்துறை அமைச்சர் தலைவராகவும், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு உறுப்பினர் - செயலாளராகவும் உள்ளனர்.

## அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறைச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத்துறைச் செயலாளர், வணிகவரித்துறை ஆணையர், உள்துறைத் துணைச் செயலாளர் (சினிமா), தொழிலாளர் நலத்துறை ஆணையர், நில நிருவாகத்துறை ஆணையர் ஆகிய எட்டு அரசு உயர் அலுவலர்கள் அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் ஆவர்.

அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமனம் செய்யப்படுகின்றனர்.

இந்நலவாரியத்தில், தற்போது 39 சங்கங்களைச் சார்ந்த திரைப்பட, சின்னத்திரைத் தொழிலாளர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். இந்நலவாரியத்தில் தற்போது 21,679 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். மேலும், 5.11.2020 முதல் 31.12.2020 வரை 5,113 கலைஞர்கள் உறுப்பினர்களாகச் சேர விண்ணப்பம் செய்துள்ளனர்.

திரைப்படத்துறை மற்றும் சின்னத்திரையின் படைப்பாக்கத்தில் பங்கேற்றுப் பணியாற்றும் பல்வேறு சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்குக் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, கருக்கலைப்பு மற்றும் கருச்சிதைவு உதவித்தொகை, மூக்குக்கண்ணாடி உதவித்தொகை, விபத்து ஈட்டுறுதித் திட்டம், இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை போன்ற பல்வேறு நலத்திட்டங்கள் வாயிலாக உதவிகள் வழங்கப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | நலத்திட்ட உதவிகள் | உதவித் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| **அ.** | **கல்வி உதவித்தொகை** | |
| 1 | 10 ஆம் வகுப்புப் படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| 2 | 10 ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| 3 | 12 ஆம் வகுப்புப் படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500 |
| 4 | 12 ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற (இரு பாலருக்கும்) | 1,500 |
| 5 | முறையான பட்டப்படிப்புப் பயிலும் மாணவர்களுக்கு (இரு பாலருக்கும்) | 1,500 |
| 6 | விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 1,750 |
| 7 | முறையான பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 2,000 |
| 8 | விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 3,000 |

| **வ. எண்** | **நலத்திட்ட உதவிகள்** | **உதவித் தொகை (ரூபாய்)** |
|---|---|---|
| 9 | தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 2,000 |
| 10 | விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 4,000 |
| 11 | தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு (இரு பாலருக்கும்) | 4,000 |
| 12 | விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 6,000 |
| 13 | ஐ.டி.ஐ. தொழில் பயிற்சி அல்லது பலவகைத் தொழில் பயிற்சிப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 1,000 |
| 14 | விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது பலவகைத் தொழில் பயிற்சிப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 1,200 |
| **ஆ.** | திருமண உதவித்தொகை | 2,000 |
| **இ.** | மகப்பேறு உதவித்தொகை | 6,000 |
| **ஈ.** | கருக்கலைப்பு / கருச்சிதைவு | 3,000 |

| வ. எண் | நலத்திட்ட உதவிகள் | உதவித் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| | உதவித்தொகை | |
| உ. | மூக்குக் கண்ணாடிச் செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500 |
| ஊ. | **விபத்து ஈட்டுறுதித் திட்டம்** | |
| 1 | விபத்தினால் ஏற்படும் மரணம் | 1 இலட்சம் |
| 2 | விபத்தினால் ஏற்படும் ஊனம் ஊனத்தின் தன்மைக்கேற்ப | 10,000 முதல் 1 இலட்சம் வரை |
| எ. | இயற்கை மரணம் உதவித்தொகை | 15,000 |
| ஏ. | ஈமச் சடங்கு உதவித்தொகை | 2,000 |

நலவாரியத்தால் வழங்கப்படும் திட்டத்தின் மூலம் திரைப்படத்துறை மற்றும் சின்னத்திரையைச் சேர்ந்த சங்கங்களின் உறுப்பினர்களில் பயன்பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்கு ஆண்டு வாரியாக வழங்கப்பட்ட மொத்த உதவித்தொகை விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | வழங்கப்பட்ட ஆண்டு | மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 2011 | 38 | 1,98,000/- |
| 2 | 2013 | 728 | 21,39,000/- |
| 3 | 2014 | 303 | 8,00,000/- |
| 4 | 2016 | 277 | 8,00,250/- |
| 5 | 2017 | 259 | 9,41,500/- |
| 6 | 2018 | 449 | 13,61,250/- |
| 7 | 2019 | 205 | 7,20,000/- |
| 8 | 2020 | 141 | 5,28,500/- |
| | **மொத்தம்** | **2,400** | **74,88,500/-** |

01.01.2020 முதல் 31.12.2020 வரை நலத்திட்ட உதவிகள் கோரிய 226 உறுப்பினர்களுக்கு மொத்தம் ரூபாய் எட்டு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து ஐநூறு உதவிநிதி அவர்களுடைய வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

01.01.2021 முதல் 19.08.2021 வரை உறுப்பினர்களிடமிருந்து நலத்திட்ட உதவிகள் கோரி 125 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாரியத்தின் வாயிலாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் நலவாரியக் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு, பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

# திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள்

## திரைப்பட விருதுகள்

தமிழ்நாடு அரசாங்கத்தால் 1968ஆம் ஆண்டு முதல் சமுதாயச் சிந்தனைகள் மற்றும் மனித நல்லுணர்வுகளைப் பிரதிபலிக்கும் சிறந்த கலைப்படைப்புகளுடன் கூடிய தரமான திரைப்படங்களைத் தயாரித்திட ஊக்கப்படுத்தும் வகையில், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்குத் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறந்த திரைப்படங்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த பல்வேறு தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வுசெய்து விருதுகளை வழங்குவதற்குத் தமிழ்நாடு அரசால் தேர்வுக்குழு அமைக்கப்பட்டு, இத்தேர்வுக்குழு தேர்ந்தெடுத்துப் பரிந்துரைக்கும் சிறந்த திரைப்படங்களுக்கு முதல் பரிசாக ரூபாய் இரண்டு இலட்சம், இரண்டாம் பரிசாக ரூபாய் ஒரு இலட்சம், மூன்றாம் பரிசாக ரூபாய்

எழுபத்தைந்தாயிரம், சிறப்புப் பரிசாக ரூபாய் எழுபத்தைந்தாயிரம் ரொக்கமாக வழங்கப்படுவதோடு, நினைவுப்பரிசுகள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், மகளிரைப் பற்றி உயர்வாகச் சித்தரிக்கும் திரைப்படத்திற்குச் சிறப்புப் பரிசாக ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு), சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு), சிறந்த வில்லன் நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகை, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த இயக்குநர், சிறந்த கதை ஆசிரியர், சிறந்த உரையாடலாசிரியர், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த பாடலாசிரியர், சிறந்த பின்னணிப் பாடகர், சிறந்த பின்னணிப் பாடகி, சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த திரைப்படத் தொகுப்பாளர், சிறந்த கலை இயக்குநர், சிறந்த சண்டைப் பயிற்சியாளர், சிறந்த நடன ஆசிரியர், சிறந்த ஒப்பனைக் கலைஞர், சிறந்த தையற்கலைஞர், சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணிக்குரல் கொடுப்பவர் (ஆண்) மற்றும் சிறந்த பின்னணிக்குரல் கொடுப்பவர் (பெண்) ஆகியோருக்குத் தலா ஐந்து பவுன்

தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

கடந்த சில ஆண்டுகளாகத் திரைப்படத் துறையினருக்கான விருதுகள் வழங்கப்படவில்லை. இவற்றை விரைந்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## கலைத்துறை வித்தகர் விருதுகள்

தமிழ்த்திரை உலகில் தமது எழுத்தாலும், நடிப்பாலும் தனி முத்திரை பதித்த பேரறிஞர் அண்ணா, மக்களைச் சிரிப்பின் மூலம் சிந்திக்க வைத்த கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், மக்கள் மனம் கவர்ந்த ஏழிசை மன்னர் தியாகராஜ பாகவதர், உழைப்பால் உயர்ந்து விளங்கிய நடிகர் ராஜாசாண்டோ, மக்கள் மனங்களைக் கொள்ளை கொண்ட மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., நடிப்பிற்கே இலக்கணமாகத் திகழ்ந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன், காலத்தால் அழியாத பாடல்கள் படைத்த கவிச்சக்கரவர்த்தி கண்ணதாசன், முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா ஆகியோரின் பெயர்களில் 'கலைத்துறை வித்தகர் விருதுகள்' தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்விருதுகளைப் பெறுகின்ற கலைத்துறை வித்தகர்களுக்குத் தலா ஐந்து பவுன் தங்கப்பதக்கமும், நினைவுப்பரிசும் வழங்கப்படுகின்றன.

## அரசு திரைப்பட மானியம்

சமூகப் பொறுப்பும் சமுதாய விழிப்புணர்ச்சியுமிக்க திரைப்படங்களைத் தரமாகவும், சிறிய முதலீட்டிலும் தயாரித்து வெளியிடுவோரை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தினை, தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ளத் தேர்வுக்குழுவின் வாயிலாக, குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு திரைப்படத்திற்கும் இத்திட்டத்தின் வாயிலாக ரூபாய் ஏழு இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

2007 முதல் 2014ஆம் ஆண்டு வரை குறைந்த செலவில் தயாரித்து வெளியான தரமான 149 தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு அரசு மானியம் தலா ரூபாய் ஏழு இலட்சம் வீதம் ரூபாய் பத்து கோடியே நாற்பத்து மூன்று இலட்சத்திற்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

2015 முதல் 2017ஆம் ஆண்டு வரை திரைப்பட மானியத்திற்கான தேர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பொருள் குறித்து துறையின் சார்பில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## சின்னத்திரை விருதுகள்

தமிழ்நாடு அரசின் சார்பில் மக்களின் தினசரி வாழ்க்கையில் மிகப்பெரும் பங்கு வகித்துவரும் சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் நெடுந்தொடர்கள் மற்றும் குறுந்தொடர்களில் பங்கேற்கும் நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்குச் சின்னத்திரை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசாக ரூபாய் இரண்டு இலட்சம், இரண்டாம் பரிசாக ரூபாய் ஒரு இலட்சம் ரொக்கத்துடன் நினைவுப்பரிசு உள்ளிட்ட சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமின்றி, சிறந்த கதாசிரியர், சிறந்த திரைக்கதை ஆசிரியர், சிறந்த உரையாடல் ஆசிரியர், சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படத் தொகுப்பாளர், சிறந்த கதாநாயகன், சிறந்த கதாநாயகி, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த வில்லன் நடிகர், சிறந்த வில்லி நடிகை, சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணி இசையமைப்பாளர், சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்), சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்) மற்றும் சிறந்த தந்திரக் காட்சியாளர் எனச் சின்னத்திரையில் சிறந்து விளங்குவோர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குத்

தலா மூன்று பவுன் தங்கப் பதக்கமும், நினைவுப்பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

மேலும், ஆண்டின் சிறந்த சாதனையாளர் மற்றும் சிறந்த வாழ்நாள் சாதனையாளராகத் தேர்வு செய்யப்படுவோருக்குத் தலா ரூபாய் ஒரு இலட்சம் ரொக்கமும், நினைவுப்பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக சின்னத்திரை விருதுகள் வழங்கப்படாமல் உள்ளன. அவற்றை வழங்குவதற்கு இத்துறையால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு நிதியுதவி

சென்னையில் பல்வேறு காலக்கட்டங்களில் நடைபெற்ற சர்வதேசத் திரைப்பட விழாக்களுக்குத் தமிழக அரசின் சார்பில் இதுவரை ரூபாய் ஆறு கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் (NFDC) சார்பில் கோவாவில் நடைபெற்ற 14ஆவது இந்திய சர்வதேசத் திரைப்பட விழாவிற்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் பத்து இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

## தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்கள் விருதுகள்

2008–2009ஆம் கல்வியாண்டு முதல் 2013–2014ஆம் கல்வியாண்டுகளுக்கான பதினெட்டு குறும்படங்களைப் பார்வையிட்டு, ஆண்டு ஒன்றிற்கு ஐந்து விருதுகள் என ஆறு ஆண்டுகளுக்கு முப்பது விருதாளர்களைத் தேர்வுக்குழுவினர் தமிழக அரசுக்குப் பரிந்துரை செய்ததன் அடிப்படையில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

2014–2015ஆம் கல்வியாண்டிற்குரிய மாணவர்கள் தயாரித்த பத்து குறும்படங்களைத் தேர்வுக்குழு பார்வையிட்டு ஐந்து விருதாளர்களைத் தேர்வுசெய்து தமிழக அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

விடுபட்ட ஆண்டுகளுக்கும் மாணவர்கள் தயாரித்த குறும்படங்களைப் பார்வையிட்டு சிறந்த குறும்படங்களைத் தெரிவுசெய்து விருதுகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## இணைய வழியாகப் படப்பிடிப்பு அனுமதி

திரைப்படப் படப்பிடிப்பு அனுமதி இணைய வழியாக வழங்குவதற்குத் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# நிறைவுரை

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் வெற்றிச் சிறகுகளான செய்தி வெளியீட்டுப் பிரிவு, புகைப்படப் பிரிவு, மேற்கோள் பிரிவு, நினைவகங்கள் பிரிவு, விழாக்கள் பிரிவு, கள விளம்பரப் பிரிவு, விளம்பரப் பிரிவு, பொருட்காட்சிப் பிரிவு, திரைப்படத் துறையினர் நலவாரியம், தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம், மாநிலச் செய்தி நிலையம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 01.07.1970 முதல் தொடங்கப்பட்ட தன்னிகரற்ற தமிழரசு இதழ் மற்றும் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் என அனைத்துப் பிரிவுகள் வாயிலாகத் தமிழக அரசின் பல்லாயிரக்கணக்கான உன்னதத் திட்டங்களை வரலாற்று ஓவியமாகச் செயற்படுத்தும் வெற்றித் துறையாகச் செய்தி மக்கள் தொடர்புத்துறை மின்னி மிளிர்கிறது.

தமிழ்நாடு அரசுக்கும், தமிழக மக்களுக்கும் இணைப்புப் பாலமாக இருந்து நாட்டு மக்களிடையே ஒற்றுமையும், நல்லிணக்கமும் ஓங்கி வளர்ந்திடவும், ஏழை எளியோரின் வாழ்வாதாரங்கள் மேம்பட்டுச் சமூக

மேம்பாடு கண்டிடவும், செய்தி மக்கள் தொடர்புத்துறை புத்தாக்கத்துடனும், எழுச்சியுடனும் செயல்பட்டுத் தமிழகம் தலைநிமிர உழைப்போம்... உழைப்போம்... உழைப்போம்... என உறுதிபூண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இத்துறை தொடர்ந்து செயலாற்றும்.

**மு.பெ.சாமிநாதன்**
செய்தித் துறை அமைச்சர்

## இணைப்பு–1

## வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2021-2022


தொகை
(ரூபாய் ஆயிரத்தில்)

| | | 2019-2020 கணக்குகள் | 2020-2021 திருத்த மதிப்பீடு | 2021-2022 இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2021-2022 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2059 | பொதுப் பணிகள் | 57,74 | 1,47,47 | 2,19,01 | 2,19,01 |
| 2220 | செய்தி மற்றும் விளம்பரம் | 103,98,67 | 105,90,85 | 102,45,41 | 144,08,95 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | 1,63,99 | 3,44,64 | 1,93,21 | 4,45,61 |
| 2250 | ஏனைய சமூகப்பணிகள் | 12,13 | 14,11 | 15,46 | 14,15 |
| 4202 | கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு | --- | 67,88,60 | 1 | 1 |
| | **மொத்தம்** | **106,32,53** | **178,85,67** | **106,73,10** | **150,87,73** |



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்
முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில்
மலர்தூவி மரியாதை (சென்னை, 03.06.2021).





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்
பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தில் பார்வையாளர் குறிப்பேட்டில்
குறிப்பெழுதிக் கையொப்பமிட்டார் (காஞ்சிபுரம், **30.06.2021**).



மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள்
வள்ளுவர் கோட்டத்தில் ஆய்வு (சென்னை, 06.07.2021).



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடம்
மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்
தமிழரசு இதழின் சிறப்பு வெளியீட்டை வழங்கினார் (சென்னை, 08.07.2021).



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்
பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு
மலர்தூவி மரியாதை (சென்னை, 15.07.2021).




மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள்
தமிழரசு அச்சகத்தில் ஆய்வு (சென்னை, 01.09.2021).



மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள்
மாநிலச் செய்தி நிலையத்தில் 67,000 நூல்கள் உள்ள
நூலகத்தில் ஆய்வு (சென்னை, 02.09.2021).

**“இது ஒரு கட்சியின் அரசாக இல்லாமல் அனைத்து மக்களின் அரசாக இருக்க வேண்டும்”**

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்

©
தமிழ்நாடு அரசு
2021